பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | வைகாசி 21 திங்கட்கிழமை 04.06.2018 | கதிர் 210

### இனிது ரகசியம் அல்ல!

தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. இதற்கு முந்திய வாரத்தில் நான்கு, ஐந்து நாள்கள் நாட்டில் இல்லை.

அச்சமயம், அவருக்கு ஆப்பு வைக்கும் சதித் திட்டம் ஒன்று அவரது கட்சிக்குள் - இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் - கட்டவிழ்ந்த

பக்கம் 03

# தனிவழி செல்ல தயாராகிறது சு.க.

## நேற்று அதிரடி மாற்றங்கள்

கொழும்பு, ஜூன் 04

**தற்போது ஆட்சியில் உள்ள தேசிய அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதில் இருந்து விலகித் தனிவழி செல்வதற்கான முனைப்புக்களில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது. அதன் முக்கிய அங்கமாகக் கட்சியின் பொறுப்புக்களில் நேற்று அதிரடியான மாற்றங்களைக் கொண்டு வந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

பக்கம் 14



## சித்திரவதை தொடர்பான முறைப்பாடுகளை தூசி தட்டுகிறது மனித உரிமை ஆணைக்குழு

கொழும்பு, ஜூன் 04

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் கிடப்பில் போடப்பட்ட சித்திரவதைகள் தொடர்பான ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் தொடர்பில் மீளாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி தீபிகா உடகம தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் சித்திரவதைகள் தொடர்பான முறைப்பாடுகள் பல ஆயிரக்கணக்கில் ஆணைக்குழுவுக்கு கிடைத்தன.

பக்கம் 14

## கொள்ளையடித்துச் சீவிப்பது ராஜபக்ஷக்களின் கொள்கை

### சரத் பொன்சேகா காட்டம்



கொழும்பு, ஜூன் 04

மக்களின் பணத்தை கொள்ளையடிப்பதும் பின்னர் அந்தப் பணத்தைக் கொண்டு சுகபோக வாழ்க்கை வாழ்வதும் அர

பக்கம் 03

## பொலிஸ் அலுவலர் விபத்தில் மரணம்

கொழும்பு, ஜூன் 04

கொழும்பு - காலி பிரதான வீதியிலுள்ள பேருவளை, சபுகொட விகாரைக்கு அருகில் லொறியொன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி

பக்கம் 03

## வடக்கு - கிழக்கின் அதிகாரங்கள் சிங்கள ஆளுநர்களின் கைகளில்!

### அது பேரினவாதமே என்கிறார் கிழக்கின் முன்னாள் முதல்வர்



மட்டக்களப்பு, ஜூன் 04

மாகாண சபை ஆட்சி மக்களின் கைகளில் உள்ளதென கூறப்பட்டாலும் வடக்கு - கிழக்கு ஆகிய சிறுபான்மை இனங்கள் வசிக்கும் மாகாணங்களின் அதிகாரங்கள்

பக்கம் 14

## இக்கட்டில் சிக்கியுள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால!

### கூறுகின்றார் மஹிந்த

கொழும்பு, ஜூன் 04

ஜனாதிபதி மைத்திரி தனிமைப்படுத்தப்படவுள்ளார். அவரது அரசியல் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிட்டது. இப்போது அவர் பெரும் இக்கட்டான நிலையில் உள்ளார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பக்கம் 14

## காப்பாற்றப்படுகிறாரா கோட்டாபய ராஜபக்ஷ?

கொழும்பு, ஜூன் 04

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ கைது செய்யப்படுவதில் இருந்து நீதித்துறையின் உயர்மட்டத்தினால் காப்பாற்றப்படுகின்றாரா என்ற சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

'மிக்' போர் விமானக் கொள்வனவு மோசடி உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் தம்மைக் கைது செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும், அதற்குத் தடை விதிக்குமாறும் கோரியும் உயர்நீதி

பக்கம் 03

## பல்கலை மாணவனின் வலது கை துண்டாகியது

### பஸ்ஸின் ஜன்னலோரத்தில் வைத்துப் பயணித்தவேளை

கொழும்பு, ஜூன் 04

பெல்மடுல்ல பிரதேசத்தில் பஸ்ஸில் சென்ற பல்கலைக்கழக மாணவன்

பக்கம் 14

## 1500 கோடி ரூபா பெறுமதியான புலிகளின் சொத்து அரசுடைமை

கொழும்பு, ஜூன் 04

புலிகள் அமைப்புக்குச் சொந்தமான 1500 கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் மற்றும் சொத்துக்கள் என்பன அரசுடைமையாக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 14

## பட்டதாரிகளின் அரச நியமன வயதெல்லை 45 ஆக உயர்வு

கொழும்பு, ஜூன் 04

அரச சேவையில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கான வயதெல்லை 45 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது எனத் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ் ருவன்சந்திர தெரிவித்தார்.

இந்தப் புதிய நடைமுறைக்கு அமைய பட்ட

பக்கம் 14

## இந்திய மீனவர் அறுவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 04

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறிக் கடற்றொழில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனர்வர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை

பக்கம் 14

## நாட்டில் சமத்துவத்தைப் பேண பயங்கரவாதச் சட்டம் அவசியம்

### கூறுகிறார் அட்மிரல் சரத் வீரசேகர



கொழும்பு, ஜூன 04

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலமே நாட்டின் சமத்துவம், ஒற்றுமை போன்றவற்றை நிலையாகப் பேண முடியும். பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒழிக்கப்பட்டால் நாட்டின் சமத்துவம் சீர்குலையும் என அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பக்கம் 14

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

# இப்தார் விருந்துக்கு இஸ்லாம் இராஜதந்திரிகளுக்கும் அழைப்பு; முஸ்லிம்களை வளைத்துப் போடும் முயற்சியில் ராஜபக்ஷாக்கள்!

கொழும்பு, ஜூன் 04

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இம்முறை நடத்திய இப்தார் விருந்துக்கு, இஸ்லாமிய நாடுகளின் இராஜதந்திரிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

ரம்ஸான் நோன்பை முன்னிட்டு மஹிந்த ராஜபக்ஷ தனது அதிகாரபூர்வ வதிவிடத்தில் கடந்த வாரம் இப்தார் விருந்து, அளித்தார்.

இந்த விருந்துக்கு இம்முறை, முஸ்லிம் வணிகர்களுக்கு மாத்திரமன்றி, மேற்காசிய நாடுகளின் இராஜதந்திரிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.





இந்த இப்தார் விருந்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம், இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த காலகட்டத்தில் முஸ்லிம்கள் மற்றும், இஸ்லாமிய நாடுகளுடன் நெருக்கமான உறவுகளை வைத்திருந்தார்.

எனினும், அளுத்கமவில் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்முறையை அடுத்து, நிலைமை தலைகீழாக மாறியது. 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதில் முஸ்லிம் வாக்காளர்கள் முக்கிய பங்காற்றியிருந்தனர்.

இந்த நிலையில், முஸ்லிம்கள் மத்தியில் இழந்த செல்வாக்கை மீள நிலைப்படுத்துவதில் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

அடுத்த ஆட்சியமைக்கும் மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் முஸ்லிம்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்று அண்மையில் கோட்டாபய ராஜபக்ஷவும், பஸில் ராஜபக்ஷவும் கூறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அத்தநாயக்கவுக்கு ஐ.தே.கட்சி அழைப்பு


கொழும்பு, ஜூன் 02

பல்வேறு காரணங்களுக்காக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்களை கட்சியுடன் வந்து சேர்ந்துகொள்ளுமாறு திறந்த அழைப்பொன்றை விடுத்துள்ளோம் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்த அழைப்பு முன்னாள் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கும் பொருந்தும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சகலரையும் ஒன்றிணைத்து கட்சியைப் பலப்படுத்தி முன்னோக்கிக் கொண்டு செல்வது இதன் நோக்கம் எனவும் அவர் கூறியுள்ளார்.

## வடமேல் மாகாணத்திற்கு மகாவலி கங்கையின் நீர்!



கொழும்பு, ஜூன் 04

மகாவலி கங்கையின் நீரை வடமேல் மாகாணத்திற்கு எடுத்துச் செல்ல நீர்ப்பாசனத் திணைக்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வடமேல் மாகாண விவசாய உற்பத்திகளை அதிகரிக்க இது உதவுமென திணைக்களம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. இதற்காக செலவிடப்படும் தொகை 650 கோடி ரூபாவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெ.- இலங்கை விமானப்படை அதிகாரிகள் உயர்மட்டப் பேச்சு!

கொழும்பு, ஜுன் 04

அமெரிக்க – இலங்கை விமானப்படைகளுக்கு இடையிலான பேச்சுக்கள் அண்மையில் கொழும்பில் இடம்பெற்றுள்ளன என அமெரிக்காவின் இந்தோ–பசுபிக் கட்டளைப் பீடத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மே மாத நடுப்பகுதியில் இரண்டு நாள்கள் இந்த உயர்மட்டப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கை விமானப்படைத் தலைமையகத்தில் நடந்த இந்தப் பேச்சுக்களில், அமெரிக்காவின் இந்தோ– பசுபிக் கட்டளைப் பீடத்தைச் சேர்ந்த விமானப் படை அதிகாரிகளும், இலங்கை விமானப்படை அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இது அமெரிக்க– இலங்கை விமானப்படை அதிகாரிகளுக்கு இடையிலான இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களாகும்.

இந்தப் பேச்சுக்களில் ஓடு பாதை நடவடிக்கைகள், விநியோகம், பாதுகாப்பு, மருத்துவம், போன்ற துறைகளில், நிபுணத்துவம் பெற்ற ஏழு அமெரிக்க விமானப்படை அதிகாரிகள், இலங்கை விமானப்படை அதிகாரி களுடன் கலந்துரையாடினர்.

பிராந்திய பாதுகாப்பு, இரண்டு நாடுகளினதும் விமானப்படையினருக்கான எதிர்கால பயிற்சி வாய்ப்புகள், ஒத்திகைகள் குறித்தும் இந்தப் பேச்சுக்களின்போது



கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

விமானப்படைத்தளபதியின், வான் தேசிய காவல்படை உதவியாளர் மேஜர் ஜெனரல் ஜேம்ஸ் ஓ எய்பேர்ட் தலைமை தாங்கினார்.

பசுபிக் விமானப்படையின் அனைத்துலக உறவுகளுக்கான பிரிவின் தெற்காசியப் பிரிவுக்கான பணிப்பாளர், மேஜர் மார்ச் லீசரும் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றார்.

இந்தப் பேச்சுக்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட மேஜர் ஜெனரல் ஜேம்ஸ் ஓ எய்பேர்ட்– இந்தியப் பெருங்கடலில் இலங்கை மிக முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருக்கிறது. இலங்கையுடன் நாம் பலமான உறவுகளை வைத்துக் கொள்வதற்கு இது முக்கியமான காரணம்.

இந்தப் பேச்சுக்கள் மிகவும் வெற்றிகரமாக அமைந்துள்ளன.

இலங்கை விமானப்படை தமது தேவைகள், முன்னுரிமைகள் தொடர்பான தகவல் களை பரிமாறி, மிகச் சிறந்த பணியை மேற்கொண்டது. இது அவர்களை இந்தோ பசுபிக் கட்டளை பீடத் தலைமையகத்துக்கு மீண்டும் அழைத்து வர எமக்கு உதவியாக உள்ளது.

இது அமெரிக்க– இலங்கை உறவுகளை முன்னேற்றுவதற்கு சிறந்த வாய்ப்பாக அமைந்தது என்று கூறினார்.

இந்தப் பேச்சுக்களில், பெறுமதியான தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், பிணைப்பை வலுப்படுத்திக் கொள்வதற்குமான முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளன.

## சட்டம் ஒழுங்கு அமைச்சை இனிமேல் ஏற்கேன் என்கிறார் சரத் பொன்சேகா

சட்டம், ஒழுங்கு அமைச்சர் பதவியை இனிமேல் வழங்க முன்வந்தாலும், தான் அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று முன்னாள் இராணுவத் தளபதியும், தற்போதைய அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தியபெதும பிரதேசத்தில் யானைகளால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஆராயச் சென்ற சரத் பொன்சேகாவிடம், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்



வாறு பதிலளித்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு அமைச்சர் பதவி சரத் பொன்சேகாவிடம் வழங்கப்படவுள்ளது என செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், அண்மைய அமைச்சரவை மாற்றத்தின்போது அவருக்கு பிராந்திய அபிவிருத்தி மற்றும் வன வாழ் உயிரினங்கள் அமைச்சுப் பதவியே வழங்கப்பட்டது.

ஐ.தே.க. தலைமையினால் சட்டம் ஒழுங்கு அமைச்சர் பதவிக்கு சரத் பொன்சேகாவின் பெயர் பரிந்துரைக்கப்பட்ட போதும், அவருக்கு அந்தப் பதவியை வழங்க இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுத்து விட்டார்.

இதனால் சரத் பொன்சேகா வெறுப்படைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகின் கடற்படை பயிற்சியில் முதன்முறையாக இலங்கை!

கொழும்பு, ஜூன் 04

உலகின் பெரும் கடற்படை பயிற்சியில் முதல் தடவையாக இலங்கையும் பங்கேற்கவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 2ஆம் திகதி வரை இந்த பயிற்சி, ஹவாயன் தீவுகள் மற்றும் தென் கலிபோர்னியா ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

இந்த பயிற்சியில் 47 போர்க் கப்பல்கள், நான்கு நீர்மூழ்கி கப்பல்கள், 200 விமானங்களுடன் 25ஆயிரம் படையினர் பங்கேற்கவுள்ளனர்.

இந்த பயிற்சிகள் 1971ஆம் ஆண்டில் இருந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இஸ்ரேல், பிரேஸில், வியட்நாம் ஆகிய நாடுகளும் இலங்கையுடன் முதல் தடவையாக இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றன

காலைக்கதிர் Kalaikkathir



### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தாக இப்போது தகவல்கள் வெளியாகத் தொடங்கியிருக்கின்றன.

மஸிடோனியாவில் நடைபெற்ற ஒரு கூட்டத் தொடரில் பங்கு பற்றுவதற்காக இலங்கை எம்.பிக்கள் அணியில் இடம் பெற்று சுமந்திரன் அங்கு சென்றிருந்தார். கொசோவா உட்பட பல முக்கிய நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு சுமந்திரனுக்குக் கிட்டியது.

தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரனின் கை ஓங்கி வருகின்றமையை, இதுவரை வெளியே எதிர்ப்புக் காட்டாமல் சகித்துக் கொண்டிருந்த சில பிரமுகர்கள் சுமந்திரன் நாட்டில் இல்லாத வேளையில் அவருக்கு எதிராகக் காய் நகர்த்தத் தொடங்கினர்.

இந்த வார இறுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தை நடத்துவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தது. அது பெரும்பாலும் முல்லைத்தீவில்நடக்கலாம்என்று அப்போது எதிர்பார்க்கப்பட்டது.

சுமந்திரனின்வாயைஅடக்கும் பிரேரணை ஒன்றை அங்கு திடுதிப்பெனக் கொண்டு வந்து நிறைவேற்றி, சுமந்திரனை மடக்குவதுதான் இது மறைவில் திட்டம் தீட்டியோரின் 'பிளான்'!

'அடுத்த முதல்வர் வேட்பாளர் விக்கிக்கு வழங்கப்படமாட்டாது', 'ஆர்னோல்ட்தான் யாழ் மாநகர முதல்வர் வேட்பாளர்' - என்றெல்லாம் கட்சியின் முடிவை முந்திக் கொண்டு அறிவிப்பது, ஊடகங்களுடன் மோதும் போக்கைக் கடைப்பிடிப்பது என்பன போன்ற பல குற்றச்சாட்டுக்களை அடுக்கி, ஆகவே இனிமேல் கட்சியின் உயர்மட்டக் குழுவில் தீர்மானிக்கப்படாத முடிவுகளை சுமந்திரன் தம்பாட்டில் அறிவிப்பதற்குத் தடை விதிக்கவேண்டும் - என்ற சாரப்பட ஒரு பிரேரணையைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதுதான் இரகசியப் பிளான் போட்டவர்களின் திட்டம்.

கட்சியின் மூன்று எம்.பிக்களுக்கு இதில் நேரடி சம்பந்தம் என்கின்றார்கள்.

ஒருவர் - சுமந்திரனின் சட்டத்தரணிச் சேவையை 'ஓசி'யில் பெற்றுக் கொண்டிருப்பவர். விலாங்கு மீன் மாதிரி, சுமந்திரனைச் சந்திக்கும்போது சிரித்துக் கதைத்து அவர் பக்கம் நிற்பவர் போல காட்டிக் கொள்பவர். அதேசமயம், வெளியில் சுமந்திரனுக்கு ஆப்பு வைக்கப்பட வேண்டும்என்றுகறுவிக் கொண்டு செயற்படுபவர். சுமந்திரனின் முழு பங்குபற்றுதல், ஈடுபாட்டுடன் முன்னெடுக்கப்பட்ட தீர்வு முயற்சிகள் பின்னடைவைக் கண்டு வரும் இந்த நிலையில், சூழ்நிலையைப் பயன்படுத்தி சுமந்திரனை நெட்டினால்தான் வீழ்த்தலாம் என்று கங்கணம் கட்டி நிற்பவர். தாம் வரித்துக் கொண்டுள்ள தொகுதியில் - தமது பிரமுகர்கள் எனக் கருதும் சிலரிடம் - சம்பந்தப்பட்ட இந்த எம்.பி, நிலைமை விளங்காமல் சுமந்திரனை கரித்துக் கொட்டி, அவரை வீழ்த்த வேண்டும் என்று பொங்கிஎழுந்துபேச, கூடவிருந்த அவரது சகா ஒருவர் அவருக்குத் தெரியாமலேயே அதைப் பதிவு செய்து, எடுத்துக் கொண்டு போய் சுமந்திரனிடம் போட்டுக்காட்டி கனகச்சிதமாக ஆப்பு வைத்து விட்டார் என்றும் தகவல்.

தமக்கு எதிராகச் சதி நகர்வுத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றமையை முதலில் நம்பாத சுமந்திரனுக்கு இந்த ஒலிப்பதிவு நாடா எல்லா உண்மைகளையும் காட்டிக் கொடுத்துவிட்டது என்றும் கூட உள்வீட்டுச் செய்திகள் கசிந்துள்ளன.

அடுத்த எம்.பி.- வன்னிப் பகுதியைச் சேர்ந்தவர். தங்களது காய் நகர்த்தல் சறுக்கி விடுமோ என அஞ்சும் இவர், மெல்ல "இந்த முயற்சிக்கும் எனக்கும் சம்பந்தமில்லை; (முதல் குறிப்பிட்ட) அந்த எம்.பி. என்னிடம் கேட்டார். இவ்விடயத்தில் ஒன்றிணைந்து செயற்பட அழைத்தார். நான் சும்மா பெயருக்குத் தலையாட்டி வைத்தேன்." - என்று இப்போது சறுக்குகின்றார் எனவும் கேள்வி.

மூன்றாவது எம்.பி.- இவ்விடயத்தில் மதில் மேல் பூனையாக இருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. எதிர்காலத்தில் தாம் கட்சிக்குள் பெரிய ஆளாக வருவதாயின் அதற்கு சுமந்திரனின் செல்வாக்கை - கட்சிக்குள் அவரது ஆக்கிரமிப்புப் பிடியை - இப்போதே வெட்டி வைக்க வேண்டும் என்பது இவரது ஆசை; எதிர்பார்ப்பு; நம்பிக்கை.

ஆனால், "அதற்காக இந்த மற்றைய இரண்டு எம்.பிக்களையும் நம்பி இறங்குவதா? அவர்களையும் கூட ஓரம் கட்டத்தானே வேண்டும்!" - என்று எண்ணி இந்த நகர்வு முயற்சியில் இருந்து இப்போதைக்கு நைஸாக 'ஜாகா' வாங்குகின்றார் அவர்.

பாவம், விவகாரத்தை ஓரளவு பகிரங்கமாக நகர்த்த முற்பட்ட முதல் எம்.பிதான் இவ்விடயத்தில் இப்போது தனித்துப் போகப் போகின்றார் எனக் கூறப்படுகின்றது.

இந்த முயற்சிக்கு கட்சி மேலிடத்திலும் சத்தம் சந்தடியில்லாத ஆசீர்வாதம் - பச்சைக் கொடி - காட்டப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

தலைவரின்வாரிசைஇளைஞர் அணித் தலைவராக்குவதாயின், அதற்கு எதிர்ப்புக் காட்டக் கூடிய சுமந்திரனை அதற்காக நேரத்துடன் ஒரு 'தட்டுத்தட்டி' வைப்பது கட்டாயம் என்று தலைவருக்கு சமாதானம் கூறப்பட்டிருக்கின்றதாம். அதனால் அவரும் இந்த முயற்சிக்கு ஆரம்பத்திலேயே - தெரிந்தும் தெரியாதவர் போல - ஆசீர்வாதம் கொடுத்திருக்கின்றார் என்றும் கேள்வி.

இளைஞரணித் தலைவர் உருவாக்கல் விடயத்தில் மும்முரமாக இருக்கும் வயோதிபப் பொருளாளர்தான் சுமந்திரனுக்கு எதிரான பிரேரணையை மத்திய குழுவில் முதலில் சமர்ப்பிப்பார் என்று ஒரு பேச்சு இருந்தது. ஆனால் அவரும் இப்போது கடைசி நேரத்தில் அதிலிருந்து 'ஜாகா' வாங்குகின்றார் என்றும், சம்பந்தப்பட்ட மத்திய குழுக் கூட்டத்துக்குத் தாம் வரமாட்டார் எனவும் வேறு வேலை இருக்கின்றது எனவும் அவர் தமக்கு நெருங்கியவர்களிடம் ஏற்கனவே கூறி விட்டாராம்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் இருந்து கட்சியின் மத்திய குழுக் கூட்டத்துக்கு வரும் உறுப்பினர்களையும் சுமந்திரனுக்கு எதிராக உசுப்பேத்திவிடும் வேலையும் மறுபுறம் கன கச்சிதமாக நடந்தேறுவதாகத் தகவல்.

ஆனால், அதற்கிடையில் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தை இவ்வார இறுதியில் - அல்லது இப்போதைக்கு - நடத்தாமல் தள்ளிப் போடும் எத்தனத்தில் கட்சிக்குள் இருக்கும் சுமந்திரனின் தீவிர ஆதரவாளர்கள் சிலர் முயற்சிக்கின்றனர்.

மத்தியகுழுவில்சுமந்திரனுக்கு எதிராக மோசமாகக் கருத்துப் பரிமாறப்பட்டால் சந்தி சிரிக்கும் என்ற கவலை அவர்களுக்கு.

ஆனால்சுமந்திரனோவழமை போல எதற்கும் 'ரெடி'!

"நான் அறிவித்த விடயங்களில் எது தவறு என்று சொல்லட்டும் பார்ப்போம்!" - எனத் திருப்பிக் கேள்வி கேட்கின்றாராம் அவர்.

"கடைசியாக நடந்த ஒரு மத்திய குழுக் கூட்டத்தில் உரையாற்றிய உறுப்பினர்கள் அனைவருமே முதல்வர் விக்கியை வைதார்கள். தாறுமாறாகப் பேசினார்கள். ஒருவர் கூட அவருக்கு ஆதரவாகப் பேசவேயில்லை. அதைத்தானேஅடுத்ததடவைஅவருக்குக் கட்சி இடம் வழங்காது என்று கூறி நான் அறிவித்தேன்.

"ஆர்னோல்ட் மாகாணசபை உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு கீழிறங்கி வந்தது வெறும் மாகாணசபை உறுப்பினர் பதவிக்காகவா? இல்லையே. அவர்தான் மாநகர சபைமுதல்வர்வேட்பாளர்என்பது ஏற்கனவே கட்சித் தலைமைக்குள் முடிவான விடயம் தானே? அதைத்தானே நான் அறிவித்தேன்?

"நான் கட்சி சார்பில் விடுத்த எந்த அறிவிப்பில் பிழையாம்? வந்து கூறட்டும் பார்க்கலாம்!" - என்று தனக்கேயுரிய சட்டத்தரணி எடுப்பில் தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறுகின்றார் சுமந்திரன்.

இந்த நெருக்கடி ஏன் என்று கருதியோ, என்னவோ, மத்திய குழுக் கூட்டத்தை காலவரையறையில்லாமல் தள்ளிப்போட தமிழரசு மேல் வட்டாரங்கள் தீர்மானித்து விட்டன என்ற செய்தி நேற்றிரவு கிடைத்தது.

ஆக உள் 'வீட்டு'க் கலகம் சிறிது நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. அவ்வளவே!

-மின்னல்-

### காப்பாற்றப்படுகிறாரா...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மன்றத்தில் கோட்டாபய அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு 2015ஆம் ஆண்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, கோட்டாபய ராஜபக்ஷவை இந்த வழக்கு முடியும் வரை கைது செய்வதற்கு, நீதியரசர் ஈவா வனசுந்தர, சிசிர ஆப்ரு ஆகியோரைக் கொண்ட ஆயம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தது. இந்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர், நீதியரசர் ஈவா வனசுந்தர இந்த வழக்கு தொடர்பான விசாரணையில் இருந்து தாமாக விலகினார்.

இதையடுத்து, ஒவ்வொரு தவணையிலும் இந்த வழக்கு விசாரிக்கப்படும்போது, நீதியரசர்களான, புவனேக அலுவிகார, பிரசன்ன ஜெயவர்த்தன ஆகியோர் விலகினர். கடைசியாக கடந்தவாரம், நீதியரசர் மூர்து பெர்னான்டோ இந்த வழக்கில் இருந்து விலகிக் கொண்டார். இதனால், கோட்டாபயவின் மனு மீதான விசாரணை நவம்பர் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரிக்கும் நீதியரசர்கள் அடுத்தடுத்து விலகுவதும், வழக்கு விசாரணை நீண்ட காலத்துக்கு பிற்போடப்படுவதும், கோட்டாபயவை கைது செய்யப்படுவதில் இருந்து காப்பாற்ற உயர்மட்ட முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## சிவகுமாரன் நினைவு நிகழ்வு



தியாகி பொன்.சிவகுமாரனின் நினைவு நிகழ்வு, அவரின் 44 ஆவது நினைவு தினமான நாளை காலை 9.30 மணிக்கு உரும்பிராய் சந்தையை ஒட்டியுள்ள பொன். சிவகுமாரனின் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதுடன் நடைபெறும்.தியாகிபொன்.சிவகுமாரன் நினைவு ஏற்பாட்டுக் குழுவின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் பல்வேறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்துவர்.

அதன் பின்னர் தியாகி சிவகுமாரனின் புகழுடல் தீயுடன் சங்கமமான உரும்பிராய் வேம்படி மயானத்தில் உள்ள அவரது நினைவுத் தூபி பகுதியிலும் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும். (உ)

## தேனீக்கிராமம் தொடக்க விழா

யாழ்ப்பாணம், ஜூன் 04

உலகச் சுற்றுச்சூழல் தினம் (ஜூன்05), உலக தேனீக்கள் தினம் (மே 20) ஆகிய தினங்களை முன்னிட்டு தேனீக்களின் வளர்ப்பை ஊக்குவிக்கும் 'தேனீக்கிராமம்' திட்டத்தின் தொடக்க நிகழ்வு - நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்குக் கோண்டாவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்த சிறப்பிப்பார். (இ

### பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விபத்துக்குள்ளானதில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுப் பிற்பகல் இந்த விபத்து நடந்துள்ளது.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் கூறினர். (ஐ)

### கொள்ளையடித்துச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சியல் செய்வதும்தான் ராஜபக்ஷாக்களின் அரசியல் கொள்கையாக இருந்தது என வன ஜீவராசிகள் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

தற்போது சிலர் எப்படியாவது ஆட்சிக்கு வந்துவிட வேண்டும் என்று தீவிரமாக முயற்சிக்கிறார்கள். இதற்காகச் சில உறுப்பினர்களுக்குப் பணத்தையும் சலுகைகளையும் கொடுத்து தமது பக்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் முயற்சித்து வருகிறார்கள்.

எனினும், இவற்றுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. கடந்த கால ஆட்சியாளர்கள் எல்லாம் கொள்ளைக்காரர்கள்என்பதைஅனைவரும் அறிவார்கள். இது இரகசியம் இல்லை.

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் இதற்காகச் சிறையிலும் இருந்தார். முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் தமது பெற்றோரின் கல்லறையைக் கட்டவும் நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து 9 கோடி 10 லட்சம் ரூபாவைக் கொள்ளையடித்தார்.

யுத்தத்துக்குச் செலவு செய்ததாகக்கூறப் பொய்யானக் கணக்குகள் இந்தத் தரப்பினரால் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறானவர்கள் கொள்ளையடித்தார்கள் என்பதை மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை அனைவரும் அறிவார்கள். அந்த அரசில் அனைவரும் கொள்ளையடித்தார்கள்.

எமது அரசு அவ்வாறான கொள்கையில் பயணிக்கவில்லை. நாம் தவறு செய்துள்ளோம் என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், கொள்ளையர்களுக்கு எதிராகச் சட்டத்தை நிலைநாட்டுவோம் என்றுதான் ஜனாதிபதி வாக்குறுதியளித்திருந்தார். இதனை அவர் உறுதியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் மக்களின் ஆணைக்கு இணங்கியே அரசொன்றை ஸ்தாபிக்க வேண்டும். எனவே, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசு 2020 ஆம் ஆண்டுவரை செல்லும். அதற்குப் பிறகும் நாம் பலமானதொரு அரசை உருவாக்குவோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொது மக்களுக்கும் யானைகளுக்குமிடையிலான மோதல்களைத் தடுக்க அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. - என்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டு யானைத் தாக்கம் குறித்து ஆராயும் விசேட உயர்மட்ட கலந்துரையாடல் நேற்றுக் காலை மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அமைச்சர் சரத் பொன்சேகா தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதியமைச்சர் பாலித தெவரப்பெரும, மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.சிறீநேசன், சீ.யோகேஸ்வரன், மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார், பிரதேச செயலாளர்கள், வனஜீவராசிகள் திணைக்கள உயர் அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## செய்யுமா தென்னிலங்கை?

கொழும்பு, மருதானையில் நேற்றுக் காலை நடைபெற்ற ஒரு கலந்துரையாடலில் அரசமைப்புக்குக் கொண்டுவரப்பட்டுள்ள இருபதாவது திருத்தப் பிரேரணை குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அங்கு ஜே.வி.பி. உறுப்பினர் சுனில் ஹிந்துன்நெத்தி எம்.பியும் தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் தெரிவித்த சில தகவல்கள் இன்றைய அரசியல் சூழ்நிலையில் கவனிக்கத்தக்கவை.

இனப் பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கியதான அரசமைப்பு உருவாக்க முயற்சி இப்போது முடங்கிப் போயுள்ள சூழ்நிலையில், குறைந்தபட்சம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதற்கான முயற்சியாக அரசமைப்புக்கான இருபதாவது திருத்தத்தை தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றுக்குக் கொண்டு வந்திருக்கின்றது ஜே.வி.பி. என்பது தெரிந்ததுதான்.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி முன் நகருமானால், இந்த 20 ஆவது திருத்த நகர்வை தாங்கள் முன்னெடுக்காமல் கைவிடவும்–

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை நீக்கத் தாங்கள் எத்தனிப்பார்கள் எனவும்–

ஜே.வி.பியினர் தரப்பில் உறுதி கூறப்பட்டது.

அதே கூட்டத்தில் வைத்து 20 ஆவது அரசமைப்புத் திருத்த முயற்சிகளைக் கூட்டமைப்பு ஆதரிக்குமா என்பது குறித்து சுமந்திரன் பதிலளித்திருக்கின்றார்.

இந்த 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் உள்ளடக்கமாக உள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும், அதற்கான திருத்தத்தை ஆதரிக்க வேண்டும் என்பதுதான் கூட்டமைப்பின் நிலைப்பாடு. அப்படித்தான் நேற்றைய கூட்டத்தில் சுமந்திரன் விளக்கியிருக்கின்றார்.

ஆனால், அப்படி இருபதாவது திருத்தத்தை தனித்து ஆதரித்து , அது நிறைவேற்றப்பட்டால், அதற்குப் பிறகு இனப் பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு ஏற்பாடுகள் இடம்பெறாமலேயே போய் விடும் என்ற அச்சம் தமிழருக்கு உண்டு. அதனால்தான் இருபதாவது திருத்தத்தை ஆதரிக்க நாம் பின் நிற்கின்றோம் என சுமந்திரன் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

அந்தக் கூட்டத்தில் சுமந்திரன் எம்.பி. நியாயமான ஒரு கேள்வியை எழுப்பியிருக்கின்றார்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக முழு நாடாளுமன்றமுமே அரசமைப்புப் பேரவையாகக் கூடி, ஒரு வழிகாட்டல் குழுவை நியமித்தது. அந்த வழிகாட்டல் குழு 75 தடவைகளுக்கு மேல் கூடி ஆராய்ந்து ஓர் இடைக்கால அறிக்கையை முன்வைத்தது. அந்த இடைக்கால அறிக்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு குறித்து எந்த ஆட்சேபனையுமின்றி ஒட்டுமொத்த இணக்கம் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்புக் குறித்து மாறுபட்ட – வேறுபட்ட – கருத்து நிலைப்பாடுகள் கட்சிகளினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆகவே, தனியாக ஒரு திருத்தத்தைக் கொண்டு வருவதானால் முதலில் எல்லோரும் இணக்கம் கண்ட – இனப் பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகள் கொண்ட – அரசமைப்புத் திருத்தத்தைத் தானே கொண்டு வரவேண்டும்? இரு வேறுபட்ட – துருவமயப்பட்ட – கருத்து நிலைப்பாட்டுச் சர்ச்சையில் சிக்கியுள்ள – நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கும் விடயத்துக்கு அல்லவே?

– இப்படி ஒரு கேள்வியைத்தான் சுமந்திரன் அங்கு எழுப்பியிருக்கின்றார். இதை தனித்து சுமந்திரனினதோ அல்லது அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கூட்டமைப்பினதோ கேள்வியாக நோக்கத் தேவையில்லை.

தென்னிலங்கையை நோக்கி ஒட்டு மொத்த தமிழினமும் எழுப்பும் கேள்வியாகவும் கூட இதனை நாம் முன்வைக்கலாம்.

புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் வழிகாட்டல் குழு ஊடாக கட்சிகளும், அவற்றின் பிரதிநிதிகளும் வழங்கிய உறுதிமொழிகளின்படி–

அந்த முயற்சியை ஒட்டி ஜனாதிபதியும், பிரதமரும் இது வரை வெளியிட்டு வந்த கருத்துக்களின் படியும்–

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் இனியும் தாமதமின்றி முன்னெடுக்கப்பட வேண்டும்.

அரசமைப்புப் பேரவையின் கூட்டங்களிலும் வழிகாட்டல் குழுவின் கூட்டங்களிலும் தென்னிலங்கையின் தலைவர்களும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளுக்குத் தாங்கள் தடையானவர்கள் அல்லர், குறுக்கே நிற்க மாட்டார்கள் என்ற கருத்து நிலைப்பாட்டைத்தான் வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும் காட்டி வந்தனர்.

அதனால்தான் அரசியல் தீர்வுக்கான அதிகாரப் பரவலாக்கல் விவகாரத்தை ஒட்டி இடைக்கால அறிக்கையில் முரண்பாடு ஏதும் இருக்கவில்லை.

அது உண்மையானால் – அதுதான் அவர்களின் நிலைப்பாடு என்றால் – அதிகாரப்பரவலாக்கலுக்கான ஏற்பாடுகளையாவது தனியான அரசமைப்புத் திருத்தமாகச் செய்வதற்கு தென்னிலங்கை முன் வரலாமே? செய்யுமா தென்னிலங்கை?

# கல்வி எமது இனத்தின் மிகப் பெரிய மூலதனம்

கிளிநொச்சி, ஜூன் 04

கல்வி என்பது எமது இனத்தின் மிகப்பெரும் மூலதனம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்

கிராஞ்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் அகிலன் பவுண்டேஷன் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பில் நடைபெறஉள்ளமாலைநேரக்கணினி வகுப்புக்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எந்த ஓர் இனத்தை அழிப்பதாக இருந்தாலும் அழிக்க நினைப்பவர்கள் முதலில் அந்த இனத்தின் கல்வியில்தான் கை வைப்பார்கள். கல்வித் தரப்படுத்தல் முறை ஆரம்பிக்கப்பட்டதால் தான் அரசிற்கு எதிராக இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள் .



சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

மாறி வரும் தொழில்நுட்ப உலகிற்கு ஏற்ப நாமும் தொழில்நுட்ப அறிவில் சிறந்து விளங்கி எம் இனத்தின் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளவேண்டும். இதனால்தான் புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் தம் இனத்தின் எதிர்கால இருப்பை உணர்ந்து இவ்வாறாகக் கல்விக்காக உதவி செய்கிறார்கள்–என்றார்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் லதீஸ்குமார், அகிலன் பவுண்டேஷன் நிறுவனத்தின் இயக்குநர் பிரபாகரன், பிரதேச சபை உறுப்பினர் ஜெயச்சித்திரா, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கிராஞ்சி பிரதேச அமைப்பாளர் கிருஷ்ணராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# இராணுவத்தினர் இரத்ததானம்

யாழ்ப்பாணம், ஜூன் 04

மருதங்கேணிப் பிரதேசத்தில் அமைந்துள்ள 10ஆவது விஜய பாகு காலாட் படையணியின் தலைமையகத்தில் அதன் 24ஆவது வருட நிறைவுதின நிகழ்வு இடம்பெற்றது.

இந்தப் படையணியின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்திய சாலைக்கு இரத்ததானம் வழங்கும் நிகழ்வு கடந்த 24ஆம் திகதி இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் படையணியின் இராணுவ அதிகாரிகள் மற்றும் இராணுவ வீரர்கள் உட்பட 102 பேர் குருதிக்கொடை வழங்கினர். (ஐ)



# இப்தார் நிகழ்வு யாழ்ப்பாணத்தில்



யாழ்ப்பாணம், ஜூன் 04

சகவாழ்வு சக்தி தரும் எனும் தொனிப்பொருளில் யாழ்.முஸ்லிம் மக்களின் இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ். மாநகர மேயர் இம்மானுவேல் ஆர்னோல்ட், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-19)

# நீதிமன்றால் பறிமுதல் செய்யப்படும் மணல் மத நிறுவனங்களுக்குச் சலுகை விலையில்

நீதிமன்றங்களால் பறிமுதல் செய்யப்படும் மணல் மற்றும் மரக்குற்றிகளை மதத் தலங்கள் மற்றும் அரச வேலைத் தளங்களுக்குச் சலுகை விலையில் விடுவிக்க நீதி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பான நீதி அமைச்சின் சுற்றறிக்கை மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதிவான்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றங்களால் பறிமுதல் செய்யப்படும் மணல், ஏலத்தில் விடப்படுகின்றன. அத்துடன், பறிமுதல் செய்யப்படும் மரங்கள், மரக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்படுகின்றன.

இந்த நடைமுறையை மாற்றிப் பறிமுதல் செய்யப்படும் மணல் மற்றும் மரங்களை மதத் தலங்கள் மற்றும் அரச வேலைத் தளங்களுக்கு வழங்க நீதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த நடைமுறை முதற்கட்டமாக எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிவரை நடைமுறையிலிருக்கும் என நீதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஆலயங்களுக்கு மணல் மற்றும் மரங்கள் தேவையாயின், பிரதேச செயலர் மற்றும் சம்பந்தப்பட்ட ஆலயம் சார் மத விவகார அமைச்சின் பரிந்துரையுடன் விண்ணப்பத்தை நீதி அமைச்சுக்கு அனுமதிக்காகச் சமர்ப்பிக்க வேண்டும்.

அரச திணைக்களங்களுக்கு மணல் மற்றும் மரங்கள் தேவையாயின் சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் அமைச்சின் பரிந்துரையைப் பெற்று நீதி அமைச்சுக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

ஒரு கியூப் மணலின் சலுகை விலையாக மேல் மாகாணத்தில் 2 ஆயிரத்து 500 ரூபாவும் ஏனைய மாகாணங்களில் ஆயிரத்து 500 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மரங்கள் அந்த மாவட்டத்தின் சந்தை விலையில் 50 சதவீத சலுகை விலையில் வழங்கப்படும். அதனை மரக் கூட்டுத்தாபனமே நிர்ணயிக்கும்.

மதத் தலம் ஒன்றுக்கு அதிகபட்சமாக 10 கியூப் மணலும் ஆயிரம் கன அடி மரமும் சலுகை விலையில் வழங்கப்படும். அதற்கு மேலான ஒவ்வொரு கியூப் மணல் மற்றும் கன அடி மரமும் நிர்ணய விலையில் வழங்கப்படும்.

டிசெம்பர் 31ஆம் திகதிக்குப் பின்னர் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பொது ஏலத்தில் மணல் மற்றும் மரங்கள் விற்பனை செய்யப்படும். மணல் நீதிமன்றாலும் மரங்கள்மரக்கூட்டுத்தாபனத்தாலும் ஏலத்திலும் விடப்படும் என்று நீதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## நாளை

04.06.2018
திங்கட்கிழமை

நட்சத்திரம் : திருவோணம் பி.ப.1.16 வரை
திதி : ஷஷ்டி முழுவதும்
சுபநேரம் : 11.52–1.22 வரை
இராகுகாலம் : 7.22–8.52 வரை

# நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் உற்சவத்துக்கான போக்குவரத்து ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 04

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களின் போக்குவரத்துக்களுக்கான வசதி குறித்து ஏற்பாடு யாழ். மாவட்ட செயலாளர் நாகலிங்கன் வேதநாயகன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



நயினாதீவு ஆலய நிர்வாகத்தினர், பிரதேச செயலாளர்கள், கடற்படையினர், பொலிஸார் தனியார் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையினர், படகு உரிமையாளர்கள், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடி இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக யாழ். மாவட்ட செயலாளர் நாகலிங்கன் வேதநாயகன் தெரிவித்தவை வருமாறு:-

‘எதிர்வரும் 14 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதி வரை காலை 5 மணியளவில் இருந்து மாலை 7.30 வரை பஸ்கள் யாழ்ப்பாணத்துக்கும் குறிகட்டுவானுக்கும் இடையில் சேவையில் ஈடுபடும்.

காலை 6 மணியில் இருந்து மாலை 6 மணி வரை குறிகட்டுவானில் இருந்து படகுகள் சேவையில் ஈடுபடும்.

படகுகள் சரியான பராமரிப்புக்குட்படுத்துவதற்கான பரிசீலனைகளை துறைமுக அதிகார சபையினர் மேற்கொள்வார்கள்.

படகுகளில் பயணிக்கும் பயணிகள் கட்டாயமாக உயிர் காப்புஅங்கிகள்அணியவேண்டும்.

அதேவேளை, விசேட திருவிழா நாள்களில் அதிகமான பஸ் சேவைகள் மற்றும் படகுகளைச் சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

எரிபொருள் விலை அதிகரித்துள்ளமையால், படகுக் கட்டணத்தைஅதிகரிக்குமாறு படகுச் சேவை உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். விலை நிர்ணய கட்டுப்பாடு சபையுடனான கலந்துரையாடலின் பின்னர் படகுக் கட்டணம் தொடர்பாக அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மீசாலை பிள்ளையார் கொடியேற்றம் இன்று

சாவகச்சேரி,ஜூன் 04

மீசாலை வடக்கு தட்டான்குளம் அருள்மிகு திருநீல கண்டப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவு பெற உள்ளது.

10 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 11 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் 12 ஆம் திகதி 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் 13 ஆம் திகதி 10மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (இ)

## தலவாக்கலை வீதியில் மண்சரிவு

கொழும்பு, ஜூன் 04

நுவரெலியா தலவாக்கலை பிரதான வீதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளமையால் ஒருவழிப் போக்குவரத்தாக மாற்றப்பட்டுள்ளது என லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மண்சரிவு நேற்றுக் காலை 6 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

மண்மேடும், கற்பாறைகளும் சரிந்து விழுந்துள்ளமையால் இதனைச் சீர்செய்வதற்கு



லிந்துலை பொலிஸாரும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

தற்போது நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலையால் வீதிகளில் மரங்கள் முறிந்து விழுதல் மற்றும் மண்சரிவு அபாயம் ஏற்படுவதனால் வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (க)





கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நேற்று ஆரம்பமானது.

நேற்றுக் காலை 9.45 மணியளவில் திருப்பலியின் பின்னர் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமானது.

## மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூன் 04

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில்** – மகாமயிலங்குளம், குடாகச்சக்கொடிய, துட்டுவாகை, தவசிக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், பண்டாரிக்குளம் கிராமம், மணிப்புரம் கிராமம், குடாகச்சகொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் – மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# மறு அறிவித்தல் வரும் வரை பூட்டப்பட்டுள்ள கினிகத்தேன - நோட்டன் பிரீஜ் பிரதான வீதி!

கொழும்பு, ஜூன் 04

கினிகத்தேன - நோட்டன் பிரீஜ் பிரதான வீதியின் லோனகல்குவாரி பகுதியில் பெரிய கல் ஒன்று சரிந்து விழுந்ததில் பிரதான வீதியின் போக்குவரத்து முழுமையாக தடைப்பட்டுள்ளது என நோட்டன் பிரீஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

மலையகத்தில் தொடர்ந்து பெய்த கடும் மழையின் காரணமாக நேற்று அதிகாலை 2 மணியளவில் இந்த பெரிய கல் சரிந்து விழுந்துள்ளது. இதனால், கினிகத்தேன - நோட்டன் பிரீஜ் பிரதான வீதியின் போக்குவரத்து முழுமையாக தடைப்பட்டுள்ளது எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.




கினிகத்தேனையில் இருந்து நோட்டன் பிரீஜ் பகுதிக்கு செல்லும் வாகன சாரதிகள் லக்ஷபான கலுகொல்ல வழியாக நோட்டன் பிரீஜ் வழியாக மாற்று வீதியினை பயன்படுத்துமாறு நோட்டன் பிரீஜ் பொலிஸார் வாகன சாரதிகளுக்கு அறிவித்தல் விடுத்துள்ளனர்.

இதேவேளை மலையகத்தில் தொடர்ந்து பெய்யும் மழையின் காரணமாகஹற்றன் - கொழும்பு பிரதான வீதி மற்றும் ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியின் ஊடாக வாகனங்களை செலுத்தும் சாரதிகள் மிக அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் கேட்டு கொண்டுள்ளனர்.

எனவே பொலிஸாரின் மறு அறிவித்தல் வரை, கினிகத்தேன - நோட்டன் பிரீஜ் பிரதான வீதியின் போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டாம் எனவும் பொலிஸார் கோரியுள்ளனர்.

## ரமழான் சிந்தனை



ரமழான் மாதத்தில் ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த ஓர் இரவு உண்டு. அவ்விரவின் மகிமையை எவர் இழந்து விடுவாரோ அவர் அனைத்தையும் இழந்த துர்ப்பாக்கியசாலியாவார்.

நூல் : இப்னுமாஜா

| ஸஹர் | சுபஹ் |
| --- | --- |
| 4.17 | 4.32 |

ம ஃரிப் (நோன்பு திறக்கும் நேரம்) 6.24

காலைக்கதிர் Kalaikkathir



# விசுவமடு கல்லாறு கிராமத்துக்குக் குடிதண்ணீர் விநியோகம்







கிளிநொச்சி,ஜூன் 04

விசுவமடு கல்லாறுக் கிராமத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பல ஆண்டுகளாகக் குடிதண்ணீருக்கான தட்டுப்பாடு நிலவி வந்த விசுவமடு கல்லாறு கிராமத்தைச் சேர்ந்த 250 குடும்பங்களினுடைய குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட 80 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கரைச்சிப் பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் இந்தக் குடிதண்ணீர் வழங்கலுக்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனால் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கரைச்சிப் பிரதேச சபையினுடைய தவிசாளர்அ.வேழமாலிகிதன் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன், பிரதேச சபை உறுப்பினர்கள், மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ

# தினசரி ராசி பலன் (04.06.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் வைகாசித் திங்கள் 21 ஆம் நாள் திங்கட்கிழமை. பஞ்சமித்திதி காலை 6.52 மணி வரை பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம்: திருவோணபகல் 3.05 மணி வரை. பின்னர் அவிட்டம். அமிர்தசித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை7.24 மணி முதல் 8.59 மணி வரை.

**சுபநேரம்** - பகல் 11.53 மணி முதல் 1.24 மணி வரை.

இன்று சங்கடகர சதுர்த்தி

**திவசம் செய்ய வேண்டிய திதி** - வைகாசி மாத தேய்பிறை ஷஷ்டி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - திருவோணம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** மத்திமமான நாள். வருமானம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். எண்ணிய காரியங்கள் இழுபறியில் இருக்கும். தேகநலக்குறைவு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

**ரிஷபம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவில் நல்லுறவு நிலவும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள். வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும்.

**மிதுனம்** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியாக அலைய வேண்டி வரும். சிலர் உடல் நலக் குறைவால் மருத்துவரின் உதவியை நாடுவார்கள். மாணவர்கள் தம் பகுதி நேர வகுப்புக்காக தகுந்த ஆசிரியரைத் தேடி அலைவார்கள்.

**கடகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். தேக சுகம், குடும்ப சுகம் சீராக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் அதிக தாமதத்தைத் தரும்.

**சிம்மம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி மேலோங்கும். எண்ணிய காரியங்கயள் நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி** சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து சுபீட்சம் உண்டாகும். சிலருக்குப் பூர்வீகச் சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். பெண்களுக்கு சுப காரியங்கள் நடக்கம்.

**துலாம்** சலனம் மிகுந்த நாள். மனச் சஞ்சலம், யோசனை அதிகரிக்கும். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். சுய தொழில் ஆதாயம் குறையும்

**விருச்சிகம்** மத்திமமான நாள். வருமானம் சுமாராக இருக்கும். குடும்ப உறவுகளுடன் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. தொழிலில் கடின உழைப்பு இருக்கும். பயணம் செய்யும் போது வேகத்தைக் குறைக்கவும்.

**தனுசு** இன்பமான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். பெண்கள் விரும்பிய ஆடை, அணிமணிகள் வாங்கி மகிழ்வார்கள். சிலர் குடும்பத்துடன் சுற்றுலாப் பயணம் செய்வார்கள்.

**மகரம்** உயர்வான நாள். வருமானம் உயரும். குடும்பத்தில் ஒற்றுமை நீடிக்கும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டும், பதவி உயர்வும் மகிழ்ச்சியைத் தரும்.

**கும்பம்** சஞ்சலமான நாள். மனதில் ஒருவித கவலை உண்டாகும். பொருளாதாரம் பற்றாக்குறையாக இருக்கும். தேக நிலை பாதிப்புறும். வரவுக்கு மீறிய செலவுகளால் கடன் பட நேரும்.

**மீனம்** சுபீட்சமான நாள். தனலாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். சகோதர உறவு வலுவடையும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். உறவுகள் வரவால் வீட்டில் சந்தோஷம் அதிகரிக்கும்.

**சந்திராஷ்டம நாள்: மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1ஈம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# குண்டசாலை தேசிய கலையகம் பொதுமக்களிடம் கையளிப்பு



கண்டி, ஜூன் 04

இலங்கை கலைஞர்களின் மேம்பாட்டிற்காககண்டிகுண்டசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தேசியக் கலையகத்தை ஜனாதிபதி மைத்திரி நேற்று முன்தினம் பிற்பகல் பொது மக்களிடம் கையளித்தார்.

465 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தத் தேசிய கலையகத்தில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் தங்குவதற்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

திறந்தவெளி அரங்கம் மற்றும் இசை, நடன பயிற்சிகளுக்கான இரண்டு மண்டபங்களை கொண்ட இந்தத் தேசிய கலையகம் 05 ஏக்கர் நிலப்பரப்பில் தாபிக்கப்பட்டுள்ளமையுடன், இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தேசிய மட்டத்திலான ஒரே ஒரு கலையகம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

கலாசார அலுவலக திணைக்களத்தின் கீழ் பராமரிக்கப்பட்டுவரும் இந்தத் தேசிய கலையகம் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளைஞர், யுவதிகள் மற்றும் கலைஞர்களுக்கான பயிற்சி நெறிகளை வழங்குவதற்காகவும் பயன்படுத்துவதற்கு கலாசார அலுவல்கள் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

நினைவுப் பலகையை திரை நீக்கம் செய்து தேசிய கலையகத்தை திறந்து வைத்த ஜனாதிபதி , அங்கு வைக்கப்பட்டிருந்த நினைவுப் புத்தகத்தில் விசேட குறிப்பொன்றையும் பதிவு செய்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, மத்திய மாகாண ஆளுநர் பி.பீ. திஸாநாயக்க, முதலமைச்சர் சரத் ஏகநாயக்க, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுஷா கோகுல உட்பட சிரேஷ்ட கலைஞர்கள் பலரும் பங்குபற்றினர்.

# கலைஞர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 04



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசணையுடன் யாழ்ப்பாண மாவட்டத்தின் கலைத்துறை வளர்ச்சிக்காக ஆர்மோனிய வாத்திய இசைக் கலைஞராக 47 வருடங்களாக சேவையாற்றிய தொல்புரம் பத்தானைக் கேணியடியைச் சேர்ந்த கலைஞர் கலாபூஷணம் கந்தப்பு லோகேஸ்வரனின் கலைச் சேவையைப் பாராட்டி யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரால் தொல்புரம் 'செந்தூரன் சோவை' பத்தானைக் கேணியடியில் நடைபெற்ற விழாவில் 'கலைஞர் சுவதம்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். (இ

# மார்ச் மாதத்தில் கூடுதலான ஏற்றுமதி!

கொழும்பு, ஜூன் 04

மார்ச் மாதத்தில் கூடுதலான ஏற்றுமதி இடம்பெற்றுள்ளது என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளவை வருமாறு:-

2018 மார்ச்சில் வெளிநாட்டுத்துறை கலப்பான செயலாற்றமொன்றினைக் காட்டியது. இறக்குமதி மீதான செலவினம் தொடர்ந்தும் அதிகரித்த போதும் 2018 மார்ச்சில் ஏற்றுமதிகள் வரலாற்றிலே மிக உயர்ந்த மட்டத்தை அடைந்தமை மூலம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களையும் விட குறைந்த வர்த்தகப் பற்றாக்குறைக்குப் பங்களித்தது.

2018 மார்ச்சில் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமையின் மூலம் 2018 ஜனவரியிலிருந்து அவதானிக்கப்பட்ட சாதகமான போக்கை தொடர்ந்தும் காட்டின.

தொழிலாளர் பணவனுப்பல்கள் 2018 பெப்ரவரியில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சிக்கு மாறாக, இம்மாத காலப் பகுதியில் உயர்வடைந்தன.

அதேவேளை, சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு மாச்சில், குறிப்பாக, அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை என்பனவற்றிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகள் எடுப்பனவு செய்யப்பட்டமையின் காரணமாக சில வெளிப்பாய்ச்சல்களைக் காட்டின.

நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் தொடர்ந்தும் ஆரோக்கியமான மட்டத்தில் காணப்பட்டன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.


# வீசப்படும் கழிவுப் பொருள்களை காசு கொடுத்து வாங்கும் திட்டம்




கொழும்பு, ஜூன் 04

கழிவாக வீசப்படும் பிளாஸ்ரிக் வெற்று போத்தல்களை விலைக்கு வாங்கி அவற்றை மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதோடு திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்து சூழலைப் பாதுகாக்கும் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது என மட்டக்களப்பு மாநகர சபை நிலையியற் குழுக்களின் சுகாதாரப் பிரிவுத் தலைவர் சிவம் பாக்கியநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபை பிரிவில் இது தொடர்பான வேலைத்திட்டம் நேற்று உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாநகர சபையினால் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளில் பிளாஸ்ரிக் போத்தல்களை தரம்பிரித்து மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் செயற்திட்டத்திற்கு நிதி அனுசரணை வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று ஆசிய பவுண்டேஷன், பெய்ரா குறூப் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை என்பனவற்றினால் கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் மக்கள் கழிவுகளாக வீசும் பிளாஸ்ரிக் போத்தல்களை, ஒரு கிலோ இருபது ரூபாவிற்கு கொள்வனவு செய்யும் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

மேலும், கழிக்கப்படும் பிளாஸ்ரிக் போத்தல்ளை சேகரிப்போரை ஊக்குவிக்கும் நோக்கொடு அவர்களுக்கு மேலதிகமாக ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படவுள்ளது.

வாழ்விற்கு திரும்பிக் கோடு எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், காலி மாநகர சபைகள் மற்றும் பியகம பிரதேச சபையின் நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட இந்த உள்ளூராட்சி மன்ற அங்கத்தவர்களுக்கான தெளிவுபடுத்தும் செயலமர்வும் ஏற்கெனவே இடம்பெற்றுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

# விமான நேர அட்டவணையில் மாற்றம்

கொழும்பு, ஜூன் 04

இந்து சமுத்திர வான் பரப்பில் மேற்கொள்ளப்படவுள்ள விமானப் பயணிங்களின் பரீட்சார்த்த நடவடிக்கை காரணமாக நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்படும் மற்றும் தரையிறங்கும் விமான சேவைகளின் நேர அட்டவணை யில் மாற்றம் செய்யப்பட்டன என ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்தது.

அதற்கிணங்க யூ.எல்.318, யூ.எல்.319, யூ.எல்.306, யூ.எல்.307, யூ.எல்.402, யூ.எல்.403, யூ.எல்.314, யூ.எல்.302 ஆகிய விமான சேவை நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டன.

இது குறித்து மேலதிக விபரங்களை ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனத்தின் 1979 என்ற அவசர இலக்கத்தை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் அந்த நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

# இம்முறையே அதிக நெல் கொள்வனவு



கொழும்பு, ஜூன் 04

விவசாயிகளின் நெல் அறுவடைக்கு ஆகக்கூடிய விலையைப் பெற்றுக் கொடுப்பதற்கு நெல் சந்தைப்படுத்தும் சபை தயாராகவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நெல் சந்தைப்படுத்தும் சபையின் தலைவர் சட்டத்தரணி உபாலி மோஹூட்டி தகவல் தெரிவிக்கையில்-

சந்தைப்படுத்தும் சபையின் வரலாற்றில் ஆகக்கூடுதலான நெல் தற்போதைய அரசின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருக்கிறது.

2015 ஆம் ஆண்டில் நெல் சந்தைப் படுத்தும் சபை ஒரு லட்சத்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்துள்ளது. 2016ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 60 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்துள்ளது.

கொள்முதல் செய்யப்படும் நெல்லை சபை அரிசியாக்கி, பி.எம்.பி. ரைஸ் என்ற வர்த்தகக் குறியுடன் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளது. இதன் மூலம் சந்தையில் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த முடியும்.

நுகர்வோரான பொதுமக்கள் நியாயமான விலையில் அரிசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் நெல் சந்தைப் படுத்தல் சபை தலைவர் தெரிவித்துள்ளார்

# முல்லைநகர் வீட்டுத் திட்ட வீடுகள் இன்று பயனாளிகளிடம் கையளிப்பு!



மட்டக்களப்பு, ஜூன் 04

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று கண்ணகிபுரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முல்லை நகர் வீட்டுத்திட்டத்தின் கீழான வீடுகள் அதன் பயனாளிகளிடம் இன்று காலை கையளிக்கப்படவுள்ளன.

இது தொடர்பான நிகழ்வு அமைச்சர் சஜித் பிரேமதாச தலைமையில் இடம் பெறவுள்ளது. இத்திட்டத்தில் 25 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# கல்வித்துறையில் அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் போட்டி போடும் நிலைமையை உருவாக்க வேண்டும்!

கொழும்பு, ஜூன் 04

நல்லாட்சி அரசு இலங்கையின் கல்வித்துறையை மேம்படுத்தி உலக நாடுகளுடன் நாம் போட்டிபோடக்கூடிய வாறான பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம் என கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அமேசன் கல்லூரியின் பட்டமளிப்பு விழா கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கலந்துகொண்டு இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பல்கலைக்கழகம் செல்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்காத மாணவர்களின் அறிவுத் தாகத்தை தீர்த்து வைத்து அவர்களைக் கல்விச் சமூக அந்தஸ்துக்குக் கொண்டுவர தனியார் உயர் கல்வி நிறுவனங்கள் பெரிதும் துணை புரிகின்றன.



*ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு*

வளர்முக நாடுகளிலே இலங்கையானது கல்வித்துறையில் ஒப்பீட்டளவில் உயர்ந்த அடைவைக் கொண்டிருந்தாலும் அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் நாம் போட்டி போடக்கூடிய ஒரு நிலையை உருவாக்க வேண்டும்.

நமது நாட்டில் கல்வியியலாளர்களையும், புத்திஜீவிகளையும் அதிகரிப்பதற்கு இவ்வாறான கல்லூரிகள் மிகவும் காத்திரமாக பங்களிப்பை வழங்குகின்றன. கல்வித்துறையில் மேம்பாடடைந்தால் நாம் பொருளாதார துறையிலும் சிறப்பான வளர்ச்சியை அடைந்து கொள்ள முடியும்.

இன்றைய பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறும் மாணவர்கள் தமது வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தையும் புதிய பயணத்தையும் தொடங்குகின்றனர் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# 8,903 வீடமைப்புத் தொகுதிகளை மக்களிடம் கையளிக்க திட்டம்

கொழும்பு, ஜூன் 04

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு அடுத்த வருடத்துக்குள் 8 ஆயிரத்து தொள்ளாயிரத்து 3 வீடமைப்புத் தொகுதிகளைப் பொது மக்களிடம் கையளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அமைச்சு இதற்காக 4 ஆயிரத்து 451 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

கொழும்பு நகரில் குறைந்த வருமானத்தைக் கொண்ட பொது மக்களுக்காக இந்த வீடுகள் அமைக்கப் படுகின்றன.

இந்த மக்களுக்கு புதிய வீடமைப்புடன் புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வீடமைப்பு அதிகார சபை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 14 வீடமைப்புத் தொகுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் தொள்ளாயிரம் கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகை செலவில் இரண்டாயிரத்து 270 வீட்டுத் தொகுதிகளைக் கொண்ட திட்டம் கையளிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

(க)



காலைக்கதிர் Kalaikkathir







## யாழ். இந்துக் கல்லூரி சிவஞான வைரவர் வருடாந்த சகஸ்ர சங்காபிஷேகம்





யாழ்ப்பாணத்தில் சைவத்தினையும் தமிழையும் காக்கும் முகமாக ஆரம்பிக்கப்பட்ட எமது கல்லூரியில் வீற்றிருக்கும் சிவ ஞான வைரவப் பெருமானின் மகா கும்பாபிஷேக தின சகஸ்ர சங்காபிஷேகம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றது.

காலை 7 மணியளவில் பிரதம குரு சிவஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராஜா குருக்களின் நெறிப்படுத்தலில் கிரியைகள் ஆரம்பமாகின.

அதனைத் தொடர்ந்து அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று கோவிந்தசாமி இரத்தினகுமார் மற்றும் .சி. சுசியந்தன் (பாபு) அவர்களின் மங்கள வாத்தியங்கள் ஒலிக்க , ஆசிரியர் மாணவர்களின் தேவார பாராயணத்துடன் அதிபர் சதா நிமலன் , உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள் , ஆசிரியர்கள் , ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர் , பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் , பெற்றோர், நலன்விரும்பிகள் , மாணவர்கள் சூழ்ந்து வர சிவஞான வைரவப் பெருமானின் வீதியுலா நேற்றுமுன்தினம் முற்பகல் வேளை இடம்பெற்றது.

(இ)

### வவுனியா தெற்கு கல்வி வலயத்தின்

## பாடசாலைகளுக்கு இடையிலான 'பான்ட்' வாத்தியப் போட்டிகள்











வவுனியா ,ஜூன் 04

வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பான்ட் வாத்திய போட்டி வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

வவுனியா தெற்கு வலய பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்று வருகின்ற இப்போட்டி நிகழ்விலே 21 மேற்பட்ட பாடசாலைகளை சேர்ந்த பான்ட் குழுக்கள் பங்குபற்றுகின்றன.

ஆண்கள்பிரிவு, பெண்கள் பிரிவு மற்றும் ஆரம்ப பிரிவு என மூன்று பிரிவுகளாக போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட இப்போட்டி நிகழ்விலே வட மாகாண கல்வி பண்பாடலுவல் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பிரதி கல்விப்பணிப்பாளர்கள், உதவி கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(இ-100)



## வடமராட்சி கிழக்கில் அத்துமீறல்

## 300 படகுகளுடன் வெளியார் முகாம்



வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கரையோர எல்லை கிராமங்கள் பறிபோவது போன்று வடமராட்சி கிழக்கும் பறி போகும் நிலை உருவாகியுள்ளது. 10க்கும் மேலதிகமான வாடிகளில் 300 இற்கும் மேலதிகமான படகுகளுடன் வெளி மாவட்ட மீனவர்கள் கடலட்டை பிடிப்பதற்கு வட மராட்சி கிழக்கு கடலோரம் முழுவதும் முகாமிட்டுள்ளனர்.

யார் இவர்களுக்கு வடமராட்சி கிழக்கு கடலில் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதி கொடுத்தது?

வடமராட்சி கிழக்கில் கடலட்டை பிடிப்பதற்கு தடை இருக்கும் நிலையில் இவர்கள் கடலட்டையை பெரிய அளவில் பிடிக்கின்றனர். கடற்றொழில் நீரியல் வள துறையின் கடலட்டை பிடிக்கும் அனுமதியினை இவர்கள் வைத்துள்ளார்கள். ஆனால் அந்த அனுமதிப் பத்திரத்தில் பிரதேசம் குறிப்பிடப்படவில்லை. அதனைப் பயன்படுத்தி வடமராட்சி கிழக்கில் வாடிகள் அமைத்து கடலட்டையைப் பிடிக்கின்றார்கள்

இவர்கள் வாடிகள் அமைப்பதற்கான நிலங்களை சிலர் தங்களுடைய சுயலாபத்திற்காக கொடுத்திருக்கின்றார்கள். ஒரு சில கடற்றொழிலாளர் சங்கங்களும் தங்கள் தேவைகளுக்காக இவர்களுக்கு நிலங்களை கொடுத்ததுடன் கடலில் கடலட்டை பிடிப்பதற்கான அனு மதியும் கொடுத்திருக்கின்றார்கள்..இதற்காக 6 மாத காலத்துக்கு 11 லட்சம் வரை பணம் கொடுக்கப்படுகின்றது.

வெளிமாவட்ட மீனவர்கள் எமது பிரதேசங்களில் கடலட்டை பிடிப்பதினால் எமது உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது, கடல் வளம் அழிகின்றது, அத்துடன் கலாசார சீர்கேடுகள், இனப்பரம்பலை மாற்றியமைத்தல், சுகாதார சீர்கேடுகள் என்பன ஏற்படுகின்றன.

வடமராட்சி கிழக்கு இன்னுமொரு வெலிஓயாவாக மாறும் முன்னர் இதனைத் தடுக்க வேண்டும்.

ராகுலன் கந்தசாமி



# அதிசயக் கோயில் அங்கோர்



கலாநிதி
இரத்தினம் நித்தியானந்தன்




**தெற்கு**

மேல் அடுக்கில் மலை மீது மன்னர் அமர்ந்தவாறு மக்களிடம் குறை கேட்கிறார். கீழே காட்டிலுள்ள மலையிலிருந்து ஒரு பெண் நடந்து செல்கிறாள். ஆய்வு செய்வதற்காக ராணுவம் கூடியிருக்கிறது. யானை மீது அமர்ந்திருக்கும் படைத் தலைவர்கள் எதிரியை நோக்கிச் செல்லும் தமது படை அணிவகுப்பில் சேர்ந்து கொள்கிறார்கள். படை தளபதிகளின் பதவியைப் பற்றிய குறிப்பைச் சிலைக்கருகில் இருக்கும் கல்வெட்டு அறிவிக்கிறது.

மார்பின் மீது குறுக்காக போர்வாள் தொங்க மன்னன் இரண்டாம் சூரியவர்மன் யானை மீது நின்று கொண்டிருக்கிறான். பணியாளர்கள் 15 குடைகளைப் பிடித்தவாறு அவனைச் சூழ்ந்து நிற்கிறார்கள். மன்னனின் யானைக்கு முன்பாக இருக்கும் கொடிமரத்தில் கருடன் மீது நிற்கிற விஷ்ணு, பெட்டியில் ஏந்திய தீ வலம் செல்கிறது. அதனைத் தொடர்ந்து இசைவாணர்களும், விகடகவிகளும் செல்கிறார்கள். தாளம் போட்டவாறு பிரா



மணர்கள் மந்திரம் ஓதுகிறார்கள். பல்லக்கில் அரச பணியாகச் செல்கிறார்.

முகப்புப் பலகையின் முடிவை நோக்கி தாய்ப் படை அணி வகுப்பு, வீரர்களோடு சேருகிறது. தாய்ப் படை யானை மீது உள்ள படைத்தலைவரால் வழி நடத்தப்படுகிறது. தாய் படை, கூலிப்படையாகவோ அல்லது லோவோவிலிருந்து கெமருக்கு கட்டாயப் போர் பணிக்காக வரவழைக்கப்பட்ட படை அணியாக இருக்கலாம். கெமர் வீரர்களில் ஒருவன் தலைக் கவசம் அணிந்து, ஊது கொம்பை ஏந்தியிருக்கிறான். சிலருடைய கேடயங்கள் பூதங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

**எமனின் தீர்ப்பு - சொர்க்கமும் நரகமும்**

மூன்று அடுக்குகளில் மனிதர்களுக்குத் தீர்ப்பு கூறும் எமன், இரண்டு அடுக்குகள் சொர்க்கத்தையும், நரகத்தையும் விளக்குகின்றன. மாளிகையில் பொழுது போக்கும் 37 சொர்க்கவாசிகளையும் தண்டனையால் துன்புறும் 32 நரக வாசிகளையும் செதுக்கியுள்ள காட்சிகளை இங்கே காணலாம். இரண்டையும் அப்சரஸ்களும் அலங்கார துணியும் பிரித்துக் காட்டுகின்றன. அடுக்கின் கீழ்புறத்தை கருடன்களின் வரிசை அலங்கரிக்கிறது. கூரை 1947ஆம் ஆண்டு மின்னலில் சிதைந்து போனது. உடனடியாக இந்தக் கூரை பிரஞ்சுக்காரர்களால் மீண்டும் அமைக்கப்பட்டது. முகப்புப் பட்டையில் உள்ள குதிரை வீரர்கள் மீது பளபளப்பைக் காண முடிகிறது. கீழ்ப்பக்கம், மிகவும் மோசமான நிலையில் சிதைந்து சிமெந்து பூசப்பட்டிருக்கிறது.

**கீழ் அடுக்கு**

உச்ச நீதிபதியாக எமன், (பல கரங்களுடன் தண்டாயுதத்தை நீட்டியபடி, எருமை மீது சவாரி செய்தவாறு) குறிப்பிடெப்பவர்களுக்கு சொர்க்கத்தைக் குறிக்கும் மேல் பாதையையும், நரகத்தைக் குறிக்கும் கீழ் பாதையையும் காட்டியவாறு, தீர்ப்புக்காகக் காத்திருக்கும் ஆவிகள், எமனின் உதவியாளர்கள் தீயவர்களை குறுகிய வழியின் மூலம், தண்டனை அளிக்கும் பகுதிக்கு தள்ளுகிறார்கள்.

**மேல் அடுக்கு**

சொர்க்கலோக மாளிகையைத் தாங்கி நிற்கும் கருடன்கள், வானத்தில் அப்ரஸ்கள். கிழக்கு அரங்கு பாற்கடலைக் கடைதல் பாகவதப் புராணக் கதையை விளக்கும் முகப்புப் பட்டை அங்கோர் வாட்டில் உள்ள சித்திரங்களில் மிகவும் புகழ் வாய்ந்தது.


அமுதத்தை எடுக்கும் பொருட்டு தேவர்களும், அசுரர்களும் பாற் கடலைக் கடைகிறார்கள். பாற்கடலை கடைவதின் நோக்கம், இழந்து போன சரஸ்வதியின் மூலத்தையும் அதிர்ஷ்ட கடவுளான லட்சுமியையும், இந்திரனின் வெள்ளை யானையையும், அழகு மங்கையர்களையும் திரும்பப் பெறுவதே. இவைகளை மீட்டெடுப்பது செழுமையின் அடையாளமாகும். இது விஷ்ணுவின் இரண்டாவது அவதாரமான கூர்ம அவதாரத்தின் போது நிகழ்ந்தது.



இக்காட்சி மூன்று அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கீழ் அடுக்கில் பல கடல் வாழ் மிருகங்கள் செதுக்கப்பட்டு பாம்பினால் கரை அமைக்கப்பட்டிருக்கிறது. நடு அடுக்கின் ஒரு பகுதியில் 92 அசுரர்கள் அடுத்த பக்கத்தில் 82 தேவர்களின் வரிசை. இவர்கள் இருவரும் இணைந்து பாம்பினால் பாற்கடலைக் கடைகிறார்கள். அனுமன் உதவி செய்கிறார். கூர்ம அவதாரம் எடுத்த விஷ்ணு மந்தார மலைக்கு அடித்தளமாக தனது முதுகைத் தருகிறார். கடலின் ஆழத்தில் அவர் அமர்ந்திருக்கிறார். வாசுகிப் பாம்பு நீண்ட கயிறாக செயல்படுகிறது. அசுரர்கள் பாம்பின் தலையையும் தேவர்கள் பாம்பின் வாலையும் பிடித்திருக்கிறார்கள்.

தேவர்களையும் அசுரர்களையும் மூவர் இயக்குகிறார்கள். விஷ்ணுவுக்கு மேலே இந்திரன், இடதுபக்க கடைசியில் அனுமன், கடையும் போது பல பெண் பூதகணங்கள் தோன்றுகின்றன.

விஷ்ணு மீண்டும் மனித அவதாரத்தோடு தோன்றுகிறார். பாற்கடலைக் கடைவதற்கு 1000 ஆண்டுகள் ஆனதாக புராணங்கள் கூறுகின்றன. இந்திரனின் வாகனமாகிய மூன்று தலை யானை, அப்சரஸ்கள், லட்சுமி போன்ற உருவங்களும் காட்சியளிக்கின்றன. கடையும் போது பாம்பு விஷத்தைக் கக்குகிறது.



விஷம் தேவர்களையும் அசுரர்களையும் அழிக்கும் என்று நினைத்த பிரம்மன் விஷத்தைக் குடிக்குமாறு சிவனை வேண்டுகிறார். சிவன் விஷத்தைக் குடிக்கிறார். அதன் பிறகு அமுதம் வெளி வருகிறது. அமுதத்தை முழுவதுமாக பற்றிக் கொள்ள அசுரர்கள் ஓடுகிறார்கள். அப்போது விஷ்ணு மீண்டும் மாயா என்ற அவதாரம் எடுத்து அசுரர்கள் பறிக்க முயன்ற அமுதத்தை மீட்கிறார்.

கிழக்கு அரங்கின் மத்தியில், 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புத்தமதமாக இருந்த அங்கோர் வாட்டைப் பற்றிய சுவாரசியமான கல்வெட்டு இருக்கிறது. ஆளுநர் ஒருவர் சிறிய கல்லறையைக் கட்டி அதில் இறந்து போன தனது மனைவி, குழந்தைகளின் எலும்புகளைப் புதைத்து வைத்ததாக அது குறிக்கிறது. இந்தக் கல்லறை மோசமான நிலையில் காட்சியளிக்கிறது.

கிழக்கு அரங்கிலும், வடக்கு அரங்கின் தெற்குப் பகுதியும் அநேகமாக பிற்காலத்தில் உருவாகி இருக்கலாம். ஒரு வேளை 15 அல்லது 16ஆம் நூற்றாண்டில் உருவாகியிருக்கலாம். மைய முகப்புப் பட்டையை நோக்கி அசுரர்களின் படை செல்கிறது. நடுவில் நான்கு கரம் கொண்ட விஷ்ணு கருடனின் தோள் மீது அமர்ந்திருக்கிறார். அழிவு தொடர்கிறது. விஷ்ணு எதிரிகளை வெட்டிச் சாய்க்கிறார். அசுரர்களின் தலைவனை வீரர்கள் சூழ்ந்து கொள்கிறார்கள். மற்றும் வீரர்களின் ஒரு கூட்டம் படைத்தலைவனோடு தொடர்கிறது.

**வடக்கு அரங்கு**

அசுர மன்னனான பானனை வென்ற விஷ்ணு, இரண்டு வீரர்கள் சூழ கருடனின் தோள் மீது விஷ்ணு கிருஷ்ண அவதாரத்தில் அமர்ந்திருக்கிறார். அவருக்குப் பின்னால் பல கைகள் கொண்ட இந்திரன் காண்டாமிருக வாகனத்தில் அமர்ந்திருக்கிறான். நகரத்தைச் சுற்றியுள்ள மதில் சுவர் தீப்பிடித்து கிருஷ்ணன் முன்னேறி வருவதைத் தடுக்கிறது. கங்கையின் தண்ணீரால் தீயைக் கருடன் அணைக்கிறது. காண்டாமிருகத்தின் மீது அமர்ந்திருக்கும் அசுரன் பானா எதிர் திசையிலிருந்து வருகிறான். வலதுபுற கோடியில் கிருஷ்ணன் (ஆயிரம் தலைகளோடு கைலாய மலைமீது தனது மனைவி பார்வதியுடன் அமர்ந்திருக்கும் சிவனின் முன்பு முட்டியிட்டவாறு அமர்ந்திருக்கிறார்.

**அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் யுத்தம்**

21 பிராமண தெய்வங்கள் பாரம்பரியமான வாகனத்தில் ஊர்வலம் செல்கின்றன. ஒரு தேவர் அசுரனோடு மோதுகிறார். பின்புலத்தில் இருசாராரும் போரிடுகிறார்கள். எதிரிகள் தொடராக செல்கிறார்கள். ஒரு யக்ஷனின் தோள் மீது அமர்ந்த குபேரன் வில் அம்போடு காட்சியளிக்கிறான். அதற்கு போர்க் கடவுளான ஸ்கந்தன் பல தலைகளோடும் கரங்களோடும் மயில் மீது அமர்ந்திருக்கிறார். இந்திரன் அவனது வாகனமாகிய யானை மீது நின்று கொண்டிருக்கிறான். விஷ்ணு கருடனின் தோள் மீது அமர்ந்திருக்கிறார். ஓர் அசுரன் வாளைச் சுழற்றுகிறான். நீதிக் கடவுளான எமன் எருது இழுக்கும் தேரில் வாளும் கேடயமும் ஏந்தியவாறு வீற்றிருக்கிறான். வில்லை வளைக்கும் சிவன், அன்னத்தின் மீது அமர்ந்த பிரம்மா. குதிரைகள் இழுக்கும் தேரில் சூரியன், ஐந்து தலை நாகம் மீது வருணன்.

மூலைக் கூடாரம்: (வடமேற்கு)

**வடக்கு**

அ. இடது புறம்– பெண்கள் தங்கும் மாளிகை

ஆ. நடுவில் கதவுக்கு மேலே–சீதையை இராவணன் தூக்கிச் செல்லுதல்.

இ. வலதுபுறம் லேசாகச் சிதைந்திருக்கிறது – ராமாயணக் காட்சி

மேலே – குரங்குகளின் அடுக்கு, சிதை.

**மேற்கு**

ஈ. இடதுபுறம் – வெற்றியுடன் அயோத்திக்கு தேரில் திரும்பும் ராமன்.

உ. நடுவில் கதவுக்கு மேலே –குரங்குகள் சூழ்ந்த ராமனும் லட்சுமணனும்.

ஊ. அசோகவனத்தில் சீதையும் அனுமனும் உரையாடுதல். அனுமன் ராமனின் மோதிரத்தைக் கொடுத்தல்.

கீழே: அரக்கன்.

(தொடரும்)




# கல்விக் கதிர் வெளியீடு

**புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 36**

**பகுதி – II**

29) 25/100 தசம எண்ணாக எழுதுக ..........................................................

30) அடுத்து வரும் எண்களை வெற்றிடங்களில் எழுதுக

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 8 | 14 | 12 | 21 | ........ | ....... |

**சரியான விடையின் கீழ் கோடிடுக**

31) சித்திரைப் புத்தாண்டு காலத்தில் பூக்கும் தாவரம் அல்லாதது
1. வேம்பு 2. நாவல் 3. முள்முருக்கு 4. பலா

32) களைப்படையாது வேகமாக ஓடும் திறனுடைய விலங்கு
1. நாய் 2. குதிரை 3.முயல் 4.கழுதை

33) முள்ளந்தண்டு இல்லாத புறவன்கூடுள்ள பிராணிகளில் ஒன்று
1. அட்டை 2. மண்புழு 3. கரப்பான்பூச்சி 4. வண்டு

34) பித்தளை குத்து விளக்கை தேய்த்து கழுவ உபயோகிக்கும் பொருள்களில் ஒன்று
1. சாம்பல் 2. திருநீறு 3. பழப்புளி 4. மணல்

35) பொய்க்காலில் நடத்தல் விளையாட்டிற்கு தேவையானது
1. பெட்டி, கயிறு 2. சிரட்டை, கயிறு
3. பலகை, கயிறு 4. பலகை, சிரட்டை

36) புகைத் துடுத்தியைப் பயன்படுத்தும் இடம்
1. கொல்லன் கம்மாலை 2.மின்சார வேலை செய்யுமிடம்
3. வயல்வெளி 4. பொன் வேலை செய்யுமிடம்

37) அதிகம் புரதம் காணப்படும் உணவு
1. முட்டை 2. பால் 3. நெத்தலிக்கருவாடு 4. கீரை

38) சமைக்கும் போது அணியப்படும் உடை
1. சட்டை 2. ஏப்ரன் 3. பாவாடை 4. சேலை


39) இலையான் மொய்த்த உணவை உண்ணும்போது ஏற்படும் நோய்
1. மலேரியா 2. டெங்கு 3. வயிற்றோட்டம் 4. பறவைக்காய்ச்சல்

40) நோய் வாய்ப்பட்டிருக்கும் எனது நண்பன் சுகமாக என்னுடன் விளையாட வேண்டும் என கடவுளை வேண்டுவது
1. பிரார்த்தனை 2. உறுதிப்பாடு 3. உதிப்பு 4. மனஉறுதி

41) இறைச்சியை மட்டும் உணவாக கொள்ளும் விலங்கு
1. நாய் 2. பூனை 3.பல்லி 4. சிங்கம்

42) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனிதநகர்
1. அநுராதபுரம் 2.பொலன்நறுவ 3. சிகிரியா 4. வவுனியா

## புள்ளிகளை இணையுங்கள்








## நிறம் தீட்டலாம் வாங்க



## 05 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்



# புத்திசாலிகள் ஆபத்தில் பேசமாட்டார்கள்

காட்டில் ஒரு சிங்கம், ஒரு ஆட்டை அழைத்தது. "என் வாய் நாறுகிறதா என்று பார்த்துச்சொல்," என்று கேட்டது. ஆடு முகர்ந்து பார்த்துவிட்டு,'ஆமாம்,நாறுகிறது.' என்று சொல்லிற்று. உடனே சிங்கம்,"முட்டாளே,உனக்கு எவ்வளவு திமிர்,"என்று கூறி அதன் மீது பாய்ந்து குதறியது.

அடுத்து சிங்கம் ஒரு ஓநாயை அழைத்து. அதனுடைய கருத்தைக் கேட்டது. ஓநாய் முகர்ந்து பார்த்துவிட்டு, "கொஞ்சம் கூட நாறவில்லை" என்றது.

சிங்கம்,"மூடனே,பொய்யா சொல்கிறாய்?"என்று கூறி அடித்துக் கொன்றது. பின்னர் ஒரு நரியை அழைத்து அதே கேள்வியைக் கேட்டது.

நரி சொன்னது, "நாலு நாளா கடுமையானஜலதோஷம்.அதனால் எனக்கு ஒரு வாசனையும் தெரியவில்லை" சிங்கம் நரியை விட்டு விட்டது. புத்திசாலிகள் ஆபத்துக் காலத்தில் வாயைத் திறக்க மாட்டார்கள்.



## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்'
சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

# காக்கை வன்னியன், கருணா வரிசையில் விக்னேஸ்வரனும் பதிவு செய்யப்படுவார்



**நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கூறுகிறார்**

முல்லைத்தீவு, ஜூன் 04
காக்கைவன்னியன் கருணா வரிசையில் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் பதிவு செய்யப்படுவார் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

அவர் அவ்வாறான ஒரு துரோகப்பட்டத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடாது என்பதே எனது வேண்டுகோள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று நாம் தமிழர்களாக ஒற்றுமையாக இருக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம், ஒற்றுமையை உருக்குலைத்து விட்டால் தமிழினமே சிதறுண்டு அடி நாதமே இல்லாமல்போய் விடும் என்பது எம் அனைவருக்குமே நன்கு தெரியும்.

அப்படியாக இருந்தும் எம்மைப் பிரித்து எமது இனத்தை அழிப்பதற்கும், எமது ஒற்றுமையைச் சீர்குலைக்கவும் இன்று பல சக்திகள் முயன்று கொண்டிருக்கின்றன.

தமிழ் மக்கள் பேரவை ஊடாக இன்னும் ஒரு கட்சி அமைக்க வேண்டும் என்று கூக்குரல் எழுந்த வண்ணம் இருக்கின்றது.

தமிழ் மக்கள் பேரவை என்று உருவாகும்போது அது அரசியல் சார்ந்தது அல்ல, பொது மக்களுக்கான ஒரு பொது அமைப்புத் தான் என்று கூறப்பட்டது.

ஆனால் இன்று அதே மேடையில் அவர்கள் நா கூசாமல் அரசியல் பற்றியும் கட்சிகள் பற்றியும் பேசி தமிழர்களின் ஒற்றுமையை அழிப்பதற்காகத் திட்டமிட்டுள்ளார்கள். இது உண்மையில் கவலைக்குரிய ஒரு விடயம்.

இன்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சராகவே விக்னேஸ்வரன் இருக்கின்றார். அவர் அப்படியே இருக்க வேண்டும்.

அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய புள்ளியாக ஒரு முக்கிய உறுப்பினராகவே இருக்கின்றார், அவரைச் சில கூட்டங்கள் ஊடுருவி தமிழர்களின் ஒற்றுமையை உருக்குலைக்கலாம் எனப் பரிசோதனை செய்ய முயற்சிக்கின்றன.

உண்மையில், நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் எம்முடைய முதலமைச்சர் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முதலமைச்சராக நாங்கள் விட்ட வழியில் இருக்க வேண்டும்.

அப்படி இல்லாமல் உருக்குலைக்கப்பட்டு விட்டால் பண்டார வன்னியன் காலத்தில் காக்கை வன்னியன் எப்படி ஒரு காட்டிக் கொடுத்தவனாக மாறினானோ, எம்முடைய மேன்மை பொருந்திய தலைவர் வே.பிரபாகரன் காலத்தில் கருணா அம்மான் ஒரு காட்டிக்கொடுத்தவனாக உருவாகினானோ அதனைப் போல வடக்கு மாகாண சபையைக் காட்டிக்கொடுத்தவராக எமது விக்னேஸ்வரன் பதிவு செய்யப்படுவார் எனக் குறிப்பிட்டுள்ளார். (க)

# 20வது திருத்தச்சட்டம்; பயங்கரமான விடயம்!



ஜே.வி.பி முன்வைத்துள்ள 20ஆவது அரசமைப்பின் திருத்தத்தில் பயங்கரமான விடயமொன்று குறிப்பிடப்பட்டுள்ளது என சட்டத்தரணிகள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் மனோஜ் கமகே சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜே.வி.பி. முன்வைத்துள்ள 20ஆவது திருத்தச்சட்டத்தில் நாட்டின் எந்தவொரு பிரஜையும், நாடாளுமன்றில் சாதரண பெரும்பான்மை ஆதரவுடன் இந்த நாட்டின் ஜனாதிபதியாக முடியும் என்ற பயங்கரமான விடயமொன்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பார்த்தால் சிறையிலிருந்து வந்து அர்ஜூன் அலோசியஸால் கூட, ஏனெனில் அவர் குற்றவாளியாக இல்லாதமையால், அத்துடன் அவர் இந்த நாட்டின் பிரஜை என்பதால் அவரால் கூட ஜனாதிபதியாக முடியும். இவ்வாறானதொரு திருத்தத்தை கொண்டு வருவதன் நோக்கம் என்ன?

எனக்கு தெரிந்த காலத்திலிருந்து மக்களுக்காக செயற்பட்டு வந்த ஜே.வி.பி இன்று மக்களையா பாதுகாக்கிறது என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாழடைந்து கவனிப்பாரற்றுக் காணப்படும் சுனாமித் திட்ட வீடுகள்: மக்கள் கவலை



கிண்ணியா, ஜூன் 04
கிண்ணியாப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நடு ஊற்று கிராமத்தின் தாயிப் நகரில் உள்ள பல சுனாமித் திட்ட வீடுகள் கவனிப்பாரற்று பாழடைந்து காணப்படுகின்றன என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து இந்த பகுதி மக்கள் தொடர்ந்தும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் சுனாமி வீட்டுத் திட்டம் என்ற பேரில் கிண்ணியாப் பிரதேச செயலக மேற்பார்வையில் கட்டிக் கொடுக்கப்பட்டதற்போது 10 வருடங்களுக்கு மேலாக பல்வேறு வீடுகள் கவனிப்பாரற்று காணப்படுகிறன.

இந்தப் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியிருக்கின்ற அதேவேளை மக்களின் நடமாட்டமின்மையால் வீடுகள் உடைந்து சேதமடைந்து காடு மண்டி காணப்படுகின்றன.

இதனால், பாழடைந்த வீடுகள் இரவு நேரங்களில் இருள் சூழ்ந்த பிரதேசமாக காணப்படுகின்றன. அயல் வீடுகளில் குடியிருப்போர் அச்ச சூழலுடன் வாழ்கின்றனர்.

இந்தக் கால கட்டத்தில் எத்தனையோ வசதி குறைந்தவர்கள் வீடு இல்லாமல் அங்கும் இங்கும் அலைந்து குடிசைகளிலும், ஏனைய தகரக் கொட்டில்களிலும், மழையிலும் நனைந்து பல்வேறு அசௌகரியங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இதனை கவனத்திற்கொண்டு பாழடைந்த கவனிப்பாரற்ற வீடுகளைக் குடியிருப்புக் காணிகளாகவோ அல்லது வேறு தேவைகள் நிமித்தமோ குடியிருப்பு வீடுகளாக மாற்றுவதற்கு உரிய அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் உரியவர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கதிர்காம பாதயாத்திரையில் இப்போது அடியார்கள் 103 பேர்



கொழும்பு, ஜூன் 04
யாழ். செல்வச்சந்நிதியிலிருந்து கடந்த மாதம் 17ஆம் திகதி ஆரம்பமாகிய வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை நேற்று வட மாகாணத்திலிருந்து கிழக்கு மாகாணத்திற்குள் பிரவேசித்தது.

வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய 3 மாகாணங்களையும், 7 மாவட்டங்களையும் இணைத்து 54 நாள்களில் 98 ஆலயங்களை தரிசித்து இடம்பெறும் இப்பாத யாத்திரை இலங்கையின் மிக மிக நீண்டதூர கதிர்காம பாதயாத்திரையாகக் கருதப்படுகின்றது.

கடந்த 17 தினங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை கடந்து நேற்று அவர்கள் திருகோணமலை மாவட்டத்திற்குள் நுழைகின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு தென்னைமரவாடி விநாயகர் ஆலயத்திலிருந்து தலைவர் வேல்சாமி தகவல் தருகையில், யாழ். சந்நிதியிலிருந்து 48 பேருடன் ஆரம்பித்த நாம் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் சேர்ந்த அடியார்களுடன் தற்போது 103 பேருடன் பயணித்து வருகின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (கு)

# வவு. 41 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்



வவுனியா, ஜூன் 04
வவுனியாவில் 41 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் நேற்றுமுன்தினம் வட மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு வவுனியா மக்கள் வங்கிக்கு முன்பாக அமைந்துள்ள கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.

இதன்போது இறம்பைக்குளம், பண்டாரிக்குளம், ஈச்சங்குளம், மரக்காரம்பளை, பூவரசங்குளம், நெளுக்குளம் ஆகிய பகுதிகளை சேர்ந்த வறிய மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த 41 குடும்பங்களுக்கு 7 ஆயிரத்து 720 ரூபா பெறுமதியான 25 கோழிக் குஞ்சுகளும், உணவு பாத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதில் நகரசபை உறுப்பினர் தி.செந்தில்ரூபன், வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர் போ.மங்களநாதன், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், வட மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கத்தின் இணைப்பாளர் ப.சிந்துஜன் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

### தென்சீனக் கடல் பகுதியில் ஏவுகணைகளை நிறுத்தி

# அண்டை நாடுகளை மிரட்டுகின்றது சீனா



## அமெரிக்கா குற்றச்சாட்டு

சிங்கப்பூர், ஜுன் 04

சர்ச்சைக்குரிய தென் சீனக் கடல் பகுதியில் ஏவுகணைகளை நிறுத்தி வைத்து, சீனா அண்டை நாடுகளை மிரட்டுகிறது என அமெரிக்கா பகிரங்கமாக குற்றம்சாட்டி உள்ளது.

சீனாவின் தென்பகுதியில் அமைந்து இருப்பது தென் சீனக் கடல். பசுபிக் பெருங்கடலின் ஒரு பகுதியாகத் திகழ்கின்ற தென்சீனக் கடல், 35 லட்சம் ச.கி.மீ. பரப்பளவிலானது. உலகின் 3 இல் ஒரு பங்கு கப்பல் போக்குவரத்து இந்தக் கடல் வழியே நடைபெறுகிறது. அது மாத்திரம் அல்லாமல், இந்தக் கடலின் அடியில் ஏராளமான எண்ணெய், இயற்கை எரிவாயு வளம் உள்ளது.

இதன் காரணமாக இந்தக் கடல் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இருப்பினும் இந்த கடலின் சர்ச்சைக் குரிய பகுதிகள் மீது சீனாவுடன் வியட்நாம், பிலிப்பைன்ஸ், தாய்வான், மலேசியா போன்ற நாடுகள் உரிமை கொண்டாடி வருகின்றன.

ஆனால் சீனா அதில் செயற்கை தீவுகளை அமைத்து, அதை ராணுவ மயமாக்கி வருகின்றது என பரவலாக ஒரு சர்ச்சை உள்ளது. சமீபத்தில் அங்குள்ள பராசல் தீவின் அங்கமான ஊடி தீவில் சீனா கனரக போர் விமானங்களை நிறுத்தியது. இதை சீனா ஒப்புக்கொண்டது. ஆனால், சீனா அந்தப் பிராந்தியத்தை சீர்குலைக்கிறது என அமெரிக்கா குற்றம்சாட்டியது.

இந்த நிலையில், அமெரிக்க ராணுவ அமைச்சர் ஜெனரல் ஜேம்ஸ் மேட்டிஸ், சிங்கப்பூரில் பாதுகாப்புத் தொடர்பான ஒரு மாநாட்டில் பேசினார். அதில் அவர் சர்ச்சைக் குரிய தென் சீனக்கடல் விவகாரம் குறித்துப் பிரச்சினை எழுப்பினார்.

அங்கு அவர் பேசும் போது தெரிவித்தவை வருமாறு:–

தென் சீனக்கடல் பகுதியில் கப்பல்களைத் தாக்கும் ஏவுகணைகள், தரையில் இருந்து வானுக்கு சென்று தாக்குதல் நடத்தும் வல்லமை மிக்க ஏவுகணைகள், மின்கருவிகளை செயலிழக்க செய்கின்ற ஜாமர் கருவிகளை சீனா ஏராளமாக நிறுத்தி வைத்துள்ளது.

இவற்றை சீனா நிறுத்தி வைத்திருப்பதன் நோக்கம், அண்டை நாடுகளை மிரட்டுவதும் அச்சுறுத்துவதும்தான்.

சீனாவின் நடவடிக்கைகள் அதன் பரந்த நோக்கங்களை கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது.

சீனாவுடன் அமெரிக்கா ஆக்கபூர்வமான உறவைப் பராமரிக்கத்தான் விரும்புகிறது. அதே நேரத்தில் தேவைப்பட்டால் அந்த நாட்டுடன் தீவிரமாக போட்டியிடுவோம். இந்த பிராந்தியத்தில் சீனா முக்கிய பங்கு ஆற்ற வேண்டும் என்பதை அமெரிக்கா அங்கீகரிக்கிறது என அவர் தெரிவித்தார்.

தென் சீனக் கடலில் சர்ச்சைக் குரிய பகுதிகளை ராணுவ மயமாக்க மாட்டோம் என்று 2015 ஆம் ஆண்டு, சீன ஜனாதிபதி ஜின்பிங் வொஷிங்டன் வெள்ளை மாளிகையில் அளித்த வாக்குறுதியை காப்பாற்றத் தவறி விட்டது என்றும் அமெரிக்க ராணுவ அமைச்சர் ஜெனரல் ஜேம்ஸ் மேட்டிஸ் சாடினார்.

இந்த மாநாட்டில் ஜேம்ஸ் மேட்டிஸ் பேசும்போது, ட்ரம்ப், வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங் உன் சந்திப்பு பற்றியும் குறிப்பிடத் தவறவில்லை.

இது தொடர்பாக அவர் பேசுகையில்–

ஜனாதிபதி ட்ரம்ப், கிம் ஜாங் உன் இருவரும் சிங்கப்பூரில் 12 ஆம் திகதி சந்தித்து நடத்த உள்ள பேச்சில் தென் கொரியாவில் அமெரிக்க ராணுவத்தை நிறுத்திலுள்ள விவகாரம் இடம்பெறாது. (தென் கொரியாவில் அமெரிக்கா 28 ஆயிரத்து 500 துருப்புகளை நிறுத்தி வைத்து இருக்கிறது). கொரிய தீபகற்ப பகுதியில் அணு ஆயுதங்கள் முழுமையாகக் கைவிடப்பட வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் விருப்பம் என்று குறிப்பிட்டார்.

# சிரியாவில் அமெரிக்க கூட்டுப்படையினரின் வான்வழி தாக்குதல்

## 12 பேர் உயிரிழப்பு



பெய்ரூட், ஜுன் 04

சிரியாவின் ஹசாகே மாகாணத்தில் அமெரிக்க கூட்டுப் படையினர் நேற்றுமுன்தினம் நடத்திய வான் வழித் தாக்குதல்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 12 பேர் உயிரிழந்தனர்.

சிரியா நாட்டின் பல பகுதிகளை ஐ.எஸ். அமைப்பினர் கைப்பற்றி வருகின்றனர். பயங்கரவாதிகள் பொதுமக்களை குறிவைத்துத் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்காக சிரியா நாட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அமெரிக்கா தலைமையிலான ஜிகாதி ஒழிப்புப் படையினர் தொடர்ந்து வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தத் தாக்குதல்களில் பொது மக்கள் பலியாகின்றனர்.


இந்த நிலையில், சிரியா நாட்டின் ஹசாகே மாகாணத்தில் உள்ள ஹிடாஜ் கிராமத்தில் பயங்கரவாதிகளைக் குறி வைத்து அமெரிக்க கூட்டுப் படையினர் நேற்றுமுன்தினம் வான்வழித் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் 20 பேர் உயிரிழந்தனர் என அங்கு இயங்கிவரும் பிரிட்டனைச் சேர்ந்த மனித உரிமைகள் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டு போர் மற்றும் தாக்குதல்கள் காரணமாக 3.5 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சவுதி இளவரசருக்கு அல்கொய்தா மிரட்டல்



சவுதி அரேபியாவில் திரையரங்கத்தை திறந்துள்ளமை மற்றும் பெண்கள் வாகனம் செலுத்த அனுமதியளித்தமை தொடர்பாக அந்த நாட்டு இளவரசர் பின் சல்மானுக்கு அல்கொய்தா பயங்கரவாத இயக்கம் மிரட்டல் விடுத்துள்ளது.

சவுதி அரேபியாவின் இளவரசரான முகமது பின் சல்மான் அந்த நாட்டில் பல்வேறு சீர்திருத்த திட்டங்களை மேற்கொண்டு வருகிறார். அந்த நாட்டு வரலாற்றில் முதன் முறையாக திரையரங்கத்தை திறந்து சவுதியில் அதிகளவில் பொழுதுபோக்கு நிகழ்சிகளை நடத்த வழி வகுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெண்கள் வாகனங்களை செலுத்துவதற்கு அந்நாட்டில் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் அந்தத் தடையை நீக்கி பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு அனுமதி வழங்கினார். இந்ததிட்டங்கள் எல்லாம் பாவகரமான திட்டங்கள் எனக் கூறியுள்ள அல் கொய்தா பயங்கரவாத இயக்கம் இளவரசர் முகமது பின் சல்மானுக்கு மிரட்டல் விடுத்துள்ளது.

‘முகமது பின் சல்மான் இஸ்லாம் மதத்தை பின்பற்றுவதற்கு பதிலாக, காரணமே இல்லாமல் கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளை சேர்ந்த நாத்திகம் மற்றும் மதச்சார்பற்றவர்களை பின் தொடர்வதால், சவுதியில் ஊழல் மற்றும் அறத்தை சிதைக்கும் போக்கு அதிகரித்துள்ளது’ என அல் கொய்தா அமைப்பின் செய்தி நிறுவனமான மதாத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்ரேலுக்குக் கடிவாளம் போடும் ஐ.நா: ‘வீட்டோ’ மூலம் முறியடித்தது அமெரிக்கா

நியூயோர்க், ஜுன் 04



காஸா எல்லையில் பாலஸ்தீனியர்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க வகை செய்யும் தீர்மானம் ஐ.நா பாதுகாப்பு சபையில் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், தனது வீட்டோ அதிகாரம் மூலம் அமெரிக்கா அதனை நிராகரித்தது.

இஸ்ரேல்– பாலஸ்தீன எல்லையான காஸா முனைப்பகுதியில் கடந்த ஒரு மாதமாக இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் மற்றும் பாலஸ்தீன மக்கள் இடையே மோதல் நடந்து வருகிறது.

நேற்றுமுன்தினம் இஸ்ரேல் ராணுவத்தின் தாக்குதலில் பாலஸ்தீன் செவிலியர் பெண் பலியானதைத் தொடர்ந்து உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 123 ஆக அதிகரித்துள்ளது.

இதனை அடுத்து, குவைத் மற்றும் சில வளைகுடா நாடுகள் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது. காஸா எல்லை மற்றும் மேற்குக் கரை மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பது, அங்கு சர்வதேச பாதுகாப்பு குழுவை ஐ.நா பார்வையில் அமைப்பது ஆகியன அந்தத் தீர்மானத்தின் சிறப்பு அம்சமாகும்.

நேற்றுமுன்தினம் இந்தத் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி அமெரிக்கா இந்த தீர்மானத்தை நிராகரித்தது.

இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசிய அமெரிக்க பிரதிநிதி நிக்கி ஹாலே, ‘இஸ்ரேல் மீது எல்லாக் குற்றச்சாட்டுகளையும் சுமத்த ஐ.நா உறுப்பு நாடுகள் விரும்புகின்றன. ஆனால், ஹமாஸ் மீது குற்றம்சாட்ட யாருக்கும் விருப்பமில்லை’ எனக் கூறினார்.

சீனா, பிரான்ஸ், ரஷ்யா இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க பிரிட்டன் வாக்கெடுப்பை புறக்கணித்தது. பாலஸ்தீன போராளி இயக்கமான ஹமாஸ் பொது மக்களை கேடயமாக பயன்படுத்தி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவதாக இஸ்ரேல் அரசு குற்றம் சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

# காவிரி மேலாண்மைக்கு நிரந்தர தலைவரே வேண்டும் மத்திய அரசிடம் விவசாயிகள் சங்கத்தினர் வலியுறுத்து

காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு நிரந்தரத் தலைவரை நியமனம் செய்வதுடன், குழு உறுப்பினர்களையும் உடனடியாக தீர்மானித்து ஆணையம் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் பெ.சண்முகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-



காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கும் அறிவிப்பை அரசிதழில் வெளியிட்டிருப்பதும், தற்காலிகத் தலைவராக மத்திய நீர்வளத் துறை செயலாளர் யு.பி.சிங்கை நியமனம் செய்திருக்கின்றமையும் உச்சநீதிமன்றத்தை ஏமாற்றுவதற்கு பயன்படலாமே தவிர, தீர்ப்பின் நோக்கத்தை நிறைவேற்ற உதவாது.

ஆணையம் மற்றும் ஒழுங்காற்றுக் குழு முழுமையாக அமைக்கப்பட்டால்தான் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள அம்சங்களை நிறைவேற்றுவதற்கான பணிகளில் இக்குழுக்கள் ஈடுபட முடியும்.

மேலும், தாமதம் செய்யாமல் இந்த ஆணையத்துக்கு நிரந்தரத் தலைவரை நியமனம் செய்து, குழு உறுப்பினர்களையும் உடனடியாகத் தீர்மானித்து ஆணையம் செயல்பட, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தென்மேற்கு பருவமழை தொடங்கி கர்நாடக அணைகளில் தண்ணீர் வரத்து அதிகரிக்கும் நிலையில், இந்த ஆண்டு குறுவை சாகுபடிக்கு தண்ணீர் கிடைக்கும்படி தமிழக அரசு விரைந்து செயல்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## நிபா வைரஸ் குறித்து அச்சம் வேண்டாம்!

### சுகாதாரத்துறை வேண்டுகோள்



நிபா வைரஸ் குறித்து பொதுமக்கள் பீதி அடைய வேண்டாம் என்று சுகாதாரத்துறைச் செயலாளர் ஜெ. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கேரளாவில் நிபா வைரஸ் தீவிரமடைந்துள்ளது. இந்நோயால் பாதிக்கப்பட்டு 17 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால், நிபா வைரஸ் குறித்த பீதி தமிழகத்தில் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் சென்னை மாநகராட்சியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க வந்த சுகாதாரத்துறைச் செயலாளர் ஜெ.ராதாகிருஷ்ணனிடம் நிபா வைரஸ் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர், நிபா வைரஸ் வௌவால்கள், கால்நடைகள், மனிதர்கள் ஆகியவற்றில் எதன் மூலமாக பரவுகிறது என்பது குறித்து தீவிர ஆய்வு நடந்து வருகிறது. தமிழகத்தில் இந்நோய் பரவாமல் தடுக்க சுகாதாரத்துறை, கால்நடைத்துறை, வனத்துறை ஒன்றாக இணைந்து நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

இதுவரை, தமிழகத்தில் நிபா வைரஸ் பாதிப்பு இல்லை. இந்நோய் குறித்து பொதுமக்கள் யாரும் பீதி அடைய வேண்டாம். மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்படுபவர்களை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம் என்றார்.

## தூத்துக்குடித் துப்பாக்கிச் சூட்டுக்கு மோடி கவலை தெரிவிக்காதது ஏன்?

மதுரை, ஜூன் 04

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு குறித்து பிரதமர் மோடி எந்தக் கருத்தும் தெரிவிக்காதமை ஏன்? எனப் பலரும் கேள்வி எழுப்பியிருந்த நிலையில், அதற்கு பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணிய சாமி விளக்கமளித்துள்ளார்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்புப் போராட்டத்தில் 13 பேர் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியான நிலையில், உயிரிழந்தவர்களுக்கு இரங்கலோ அல்லது துப்பாக்கிச்சூடு குறித்து எந்த கருத்தும் பிரதமர் மோடி தெரிவிக்கவில்லை. இதற்கு பலரும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், துப்பாக்கிச் சூடு குறித்த முழு அறிக்கை வெளியாகாததாலே பிரதமர் மோடி எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை என பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணிய சாமி நேற்று மதுரை விமான நிலையத்தில் தெரிவித்துள்ளார்.



சுப்பிரமணிய சாமி விளக்கம்

முன்னதாக, நேற்றுமுன்தினம் அவர் சென்னையில் பேசும் போது அரசியலில் இருந்து நடிகர்கள் விலகியே இருக்க வேண்டும் எனக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அப்துல்கலாம் தீவில் 'அக்னி 5' ஏவுகணை நேற்று வெற்றிகரமாகப் பரிசோதனை

அணு ஆயுதங்களை சுமந்தபடி 5 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் வரை பாய்ந்து செல்லக்கூடிய நவீன 'அக்னி-5' ரக ஏவுகணையை இந்தியா நேற்று வெற்றிகரமாக பரிசோதித்தது.

இந்தியப் பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் மூன்றுகட்ட உந்துதல் செயல்பாட்டுடன் 1.5 தொன் எடையை சுமந்து செல்லக்கூடிய வகையில் 17 மீற்றர் நீளம், 2 மீற்றர் அகலம் கொண்ட 'அக்னி-5' ரக ஏவுகணைகளை தயாரித்து வருகிறது.

அணு ஆயுதங்களைத் தாங்கிச் சென்று எதிரிகளின் இலக்குகளை



அழிக்கும் இந்த 'அக்னி-5' ஏவுகணைகள் சுமார் 5 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம்வரை, கண்டம்விட்டு கண்டம் பாய்ந்துச் சென்று தாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஒடிசா மாநிலத்தில் உள்ள பலசோர் கடற்கரை பகுதியை ஒட்டியுள்ள அப்துல்கலாம் தீவில் (பழைய பெயர் வீலர் தீவு) இருந்து நேற்று காலை 9.48 மணியளவில் 'அக்னி-5' ஏவுகணை பரிசோதித்து பார்க்கப்பட்டது.

இந்த சோதனை வெற்றிகரமாக அமைந்ததாகவும், நிர்ணயிக்கப்பட்டிருந்த இலக்கை குறி தவறாமல் 'அக்னி-5' பாய்ந்து தாக்கி, அழித்ததாகவும் தெரிய வந்துள்ளது. (க)

## இந்தியாவின் மிக மூத்த அரசியல் தலைவர் கருணாநிதி என பிரதமர் மோடி புகழாரம்

தனது 95 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு பிரதமர் நரேந்திர மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று தனது 95 ஆவது பிறந்த நாளைக்கொண்டாடினார். உடல்நலக் குறைவு காரணமாக தீவிர அரசியல் இருந்து ஓய்வு பெற்றுள்ள கருணாநிதி தற்போது அவரது கோபாலபுரம் இல்லத்தில் வசித்து வருகிறார்.

நேற்று அவரது பிறந்த நாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் உள்ள தி.மு.க தொண்டர்கள் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கினர். மேலும், கருணாநிதியின் கோபாலபுரம் இல்லம் இருக்கும் பகுதி விழாக் கோலம் பூண்டுள்ளது.

காலை முதலே அங்கு கூடிய தொண்டர்கள் கேக் வெட்டி, கருணாநிதியின் பிறந்தநாளைக் கொண்டாடி உள்ளனர். வழக்கமாக தொண்டர்களுடன் தனது பிறந்தநாளை கொண்டாடும் தி.மு.க தலைவர் கருணாநிதி, உடல்நலக்குறைவு காரணமாக முக்கிய பிரமுகர்களை மட்டும் சந்திப்பதாக கூறப்பட்டுள்ளது.

கருணாநிதி தீவிர அரசியலில் இருந்து ஓய்வு பெற்றதை அடுத்து, தற்போது செயல் தலைவராக இருக்கும் மு.க. ஸ்டாலின் கருணாநிதியை நேரில் சந்தித்து ஆசி பெற்றார்.

இந்த நிலையில், கருணாநிதியின் பிறந்த நாளுக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். மாநில மற்றும் தேசியக் கட்சியைச் சார்ந்த அனைத்து தலைவர்களும் கருணாநிதிக்கு வாழ்த்து தெரிவித்து வவித்தனர்.

அந்த வகையில், பிரதமர் நரேந்திர மோடி, தனது டுவிட்டர் பக்கத்தில் கருணாநிதிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அந்த டுவிட்டர் பதிவில், 'இந்தியாவின் மிக மூத்த அரசியல் தலைவர் கருணாநிதி. கருணாநிதி ஓர் சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், சிந்தனையாளர், கவிஞர். அவரது நீண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்வுக்கு இறைவன் அருள் புரியட்டும்' என குறிப்பிட்டிருந்தார். அதுமட்டுமன்றி, சமீபத்தில் திமுக தலைவர் கருணாநிதியை மோடி சந்திக்க வந்தபோது எடுத்துக்கொண்ட புகைப்படத்தையும் பதிவிட்டுள்ளார்.

## சிங்கப்பூர் தாவரவியல் பூங்காவில் ஒக்கிட் மலருக்கு மோடியின் பெயர்

பிரதமர் மோடி இந்தோனேஷ்யா, மலேசியா, சிங்கப்பூர் சுற்றுப்பயணத்தை நேற்றுமுன்தினம் நிறைவு செய்தார்.

கடைசி நாளான நேற்றுமுன்தினம் அவர் சிங்கப்பூர் தாவரவியல் பூங்காவை பார்வையிட்டார். யுனெஸ்கோ அந்தஸ்து பெற்ற இந்தப் பூங்காவில் உள்ள ஒருவகை ஒக்கிட் மலருக்கு மோடியின் பெயர் சூட்டப்பட்டது.

முன்னதாக சிங்கப்பூரில் உள்ள பழமை வாய்ந்த மாரியம்மன் கோயிலில் மோடி வழிபட்டார். இந்திய முஸ்லிம்களால் கட்டப்பட்ட மசூதி, புத்த மடாலயத்துக்கும் அவர் சென்றார். சிங்கப்பூரின் சாங்கி கடற்படைத் தளத்தில் இந்திய கடற்படையின் சத்புரா போர்க் கப்பல் நங்கூரமிட்டுள்ளது. அந்த கடற்படைத் தளத்துக்கு நேற்றுமுன்தினம் சென்ற பிரதமர் மோடி இந்திய கடற்படை அதிகாரிகளை சந்தித்துப் பேசினார். மகாத்மா காந்தியின் அஸ்தி சிங்கப்பூரில் கரைக்கப்பட்டது. இதை நினைவுகூரும் வகையில் கிளிபர்ட் பியரில் அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னத்தை மோடி திறந்து வைத்தார்.

## இக்கட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது உள்ளதைப் போன்ற அரசை இலங்கையின் வரலாற்றில் இதுவரையில் கண்டதில்லை. ஊழல்களும், திருட்டுகளும் நிறைந்து வழியும் அரசே தற்போது உள்ளது.

தமிழ் மக்களின் ஆதரவினால் புதிய அரசு அமைக்கப்பட்டது. மைத்திரி ஜனாதிபதியாக வந்தவுடன் ரணிலைப் பிரதமராக்கினார். அதன் பின்னர் முழுக் கட்டுப்பாடுகளும் பிரதமர் கைகளுக்கு சென்றுவிட்டன. இப்போது பிரதமரை மாற்ற முடியாத நிலையில் ஜனாதிபதி உள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவின் அண்மைய கருத்துகளின் மூலம் அவரின் எதிர்காலம் தெளிவாகத் தெரிகின்றது. ஜனாதிபதி தற்போது இக்கட்டான சூழ்நிலையைச் சந்தித்துள்ளார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் என்ன நடக்கும் என்பதே அவருக்குத் தெரியவில்லை.

மைத்திரி தனிமைப்படுத்தப்படவுள்ளார். அவரது அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டதைப் புரிந்து கொண்டுள்ள அவர், என்னால் எதுவும் முடியாது எனக்கூறிக்கொண்டு அழுது அழுது முழுநாட்டையும் சுற்றி வந்து கொண்டிருக்கின்றார்.

எவ்வாறாயினும் நாட்டுக்கு முறையான தலைமைத்துவம் அவசியம். அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற தீர்க்கமான முடிவுகள் அவசியம். இந்த நிலையில் கோட்டாபய அடுத்த ஜனாதிபதிவேட்பாளராக வரவேண்டும் என்ற கருத்து அதிகமானோரிடம் காணப்படுகின்றது. இந்த விடயம் குறித்தும் நாம் ஆலோசனைகளைச் செய்துவருகின்றோம். – என்றார். (ஐ)

## பட்டதாரிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாரிகள் அனைவரும் 2019 ஆம் ஆண்டில் மூன்று கட்டங்களாக அரச சேவைக்குள் இணைத்துக் கொள்ளப்படுவர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரச சேவையில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கான வயதெல்லை 35ஆக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

அரச வேலையில் பட்டதாரிகளை இணைப்பதற்கான வயதெல்லையை 45ஆக அதிகரிக்குமாறு வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை முன் வைத்தனர்.

அதற்கமைய வயதெல்லையை 45ஆக உயர்த்துவதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு முன் வைத்த யோசனைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

5 ஆயிரம் பட்டதாரிகள் அடுத்த மாதமும், 15 ஆயிரம் பட்டதாரிகள் வரும் செப்ரெம்பரிலும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கான பயிற்சியாளர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

2019ஆம் ஆண்டில் மூன்று கட்டங்களில் பட்டதாரிகளை அரசசேவைகளில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போதே முன்னெடுக்கப்பட்டுள்ளன. – என்றார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பான்மை இன ஆளுநர்களின் கைகளில் காணப்படுகின்றமை பேரினவாதமாகும் என்று வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் நிர்வாகம் தொடர்பாக நேற்றுத் தாம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு :–

இலங்கையின் பேரினவாத ஆட்சியில் அதிகாரப் பகிர்வு என்றில்லாமல் அதிகாரப் பரவலாக்கம் மாத்திரமே காணப்படுகின்றது.

இலங்கையின் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மை சமூகங்களான தமிழர்களும் முஸ்லிம்களும் கூடுதலாக வாழ்கின்றார்கள்.

ஆனால், வடக்கு – கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களினதும் அதிகாரங்கள் முதலமைச்சர்களின் கைகளில் காணப்படுகின்றன. ஆனால் வடக்கு – கிழக்கு மாணகாணங்களின் நிர்வாக அதிகாரம் முதலமைச்சர்களிடம் இல்லாமல் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாகாண ஆளுநர்களின் கைகளிலேயே உள்ளது.

இவ்வாறு வடக்கு – கிழக்கு முதலமைச்சர்களின் அதிகாரத்துக்கான சுதந்திர எல்லைகள் மட்டுப்படுத்தப்பட்டனவாக இருந்து வந்தன.

மேலும் வடக்கு, கிழக்கு முதலமைச்சர்களும் ஏனைய முதலமைச்சர்களைப் போன்று மக்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருந்தும் ஆளுநர்கள் அவர்களது நடவடிக்கைகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முயற்சிகளையே முன்னெடுத்து வந்துள்ளனர்.

எனினும் கிழக்கு மாகாணத்தில் எனது தலைமையிலான சுமார் இரண்டரை வருட ஆளுகைக் காலத்தில் மாகாணசபை அதிகாரங்கள் தொடர்பில் பல்வேறு படிப்பினைகளைக் கிழக்கு மக்களுக்கும் ஏனைய மாகாண மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் வழங்கி விழிப்புணர்வூட்டக் கூடியதாக இருந்தது.

குறிப்பாக உள்ளூராட்சிக்கு உட்பட்ட அதிகாரப் பிரயோகங்களை அமுல்படுத்திச் சேவையாற்ற முடிந்தது.

மாகாணமொன்றுக்கு உள்ளூராட்சியின் அதிகாரங்கள்பரிபூரணமாகக்கிடைப்பதை இந்தக் காலத்தில் உறுதிப்படுத்தவும் முடிந்தது.

மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருந்த நிதிசார் விடயங்களை உள்ளூராட்சிக்குப் பெற்றுக் கொடுக்கவும் முடிந்தது.

எவ்வாறாயினும், சிறுபான்மை இன மக்கள் தமது மாகாண ஆளுகையின் முழு அளவிலான அதிகார உரிமைகளைப் பெற்றுக் கொள்ள இன்னமும் நீண்டகாலம் பயணிக்க வேண்டும் என்பதையே சமகால நிகழ்வுகள் புலப்படுத்தி நிற்கின்றன.

இந்த விடயத்தில் சிறுபான்மைச் சமூகங்களின் ஒற்றுமை என்பது இன்றியமையாதது. பிளவுபட்டு நிற்பின் சிறுபான்மைப் பிரதேசங்களை பேரினவாதம் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கும். பின்னர் மக்கள் வெறுமையை அனுபவிக்க நேரிடும் – என்று கூறியுள்ளார். (ஐ)

## சித்திரவதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவை ஏழு தொடக்கம் எட்டு ஆண்டுகள் கடந்தவை. சில அதற்கு மேற்பட்ட காலப் பகுதியைக் கொண்டவை என்று அவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

2014ஆம் ஆண்டு வரை கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக் கோவைகள் ஆயிரக் கணக்கில் குவிந்துள்ளன. அலுவலகத்தைச் சுத்தப்படுத்தப் பணிக்கு அமர்த்தப்பட்ட பணியாளர்களால் அவை மீட்கப்பட்டுள்ளன.

2014ஆம் ஆண்டுக்குப் பின்னர் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழு ஆராய்ந்து வருகிறது.

காணாமல் ஆக்கப்படுதல், தடுப்புக் காவல் சித்திரவதை, தடுத்துவைத்தல் மற்றும் காரணமின்றிய கைதுகள் ஆகியன இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பெறப்படுகின்றன பொதுவான முறைப்பாடுகளாகும்.

காணாமற்போனோர் அலுவலகம் நிறுவப்பட்ட பின்னர், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முறைப்பாடுகள் அந்த அலுவலகத்தால் விசாரணை நடத்தப்படும். எனினும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவே கையாளும். – என்றார். (ஐ)

## நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் 30 வருட காலமாக நிலவிய போர்நிலைமைகளின்போது மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன மக்களின்சொத்துக்கள் அபகரிக்கப்பட்டன. இருப்பினும் அந்த நிலைமைகளிலிருந்து மக்கள் மீண்டுவருவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆறுதலாக அமைந்தது. ஆகவே பயங்கரவாதத்தடைச் சட்டம் ஒழிக்கப்பட வேண்டுமென்ற விடயத்தை ஏற்றுகொள்ள முடியாது.

தமிழீழ விடுதலைப்புலிகள் நாட்டை ஆக்கிரமிக்கும் நோக்கிலே போரிட்டனர். போர் முடிவடைந்த பின்னரும் அவர்களது நோக்கங்கள் முடிவுறவில்லை. நாட்டை இரண்டாகப் பிரித்து தனி ஈழத்தை உருவாக்குவது விடுதலைப் புலி ஆதரவாளர்களின் தற்போதைய அரசியல் நோக்கமாகக் காணப்படுகின்றது.

அதேபோன்று தற்போது அரசியலில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஈழத்தைப் பிரித்துத் தனியாட்சியே கோருகின்றனர். தனியாட்சிபெற்றுகொள்ள அரசியல்வாதிகள் முயற்சிக்கும்போது நாட்டில் தற்போது காணப்படும் அமைதி சீர்குலைவதற்கு இது முழு காரணமாக அமைந்துவிடும். அரசியல்வாதிகளின் நாட்டைப் பிரிக்கும் எண்ணங்களுக்கு இது வாய்ப்பாக அமைந்துவிடும்.

இந்தத் தடைச் சட்டமானது இலங்கையின் மனித உரிமைகளை பாதுகாத்து வருகின்றது. போர் காலத்தில் மக்கள் கடுமையாக பாதிப்படைந்தனர். அது போன்ற மனித உரிமைகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களைத் தவிர்த்து கொள்வதற்குப் பயங்கரவாதத் தடைச்சட்டம் பலமாக அமைந்தது. அந்நிய அமைப்புக்களின் சதிகளிலிருந்து மக்களின் உரிமைகளைப் பேண வேண்டுமானால் பயங்கரவாத தடைச்சட்டம் ஒழிக்கப்படக் கூடாது. – என்றார். (ஐ)

## தனிவழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சு.கவின் செயற்குழுக் கூட்டம் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் என முன்னரே எதிர்வு கூறப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்றுக் கட்சியில் திடீர் மாற்றங்களைச்செய்து அதிரடிகாட்டியுள்ளார் ஜனாதிபதி.

தேசிய அரசில் இருந்து சு.க. வெளியேறவேண்டும் என ஜனாதிபதிக்குக் கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வந்தன. தேசிய அரசை விட்டு வெளியேறிய சு.கவின் 16 எம்.பிக்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டதரப்புக்களில் இருந்து ஜனாதிபதிக்குக் கடுமையான அழுத் தங்கள் பிரயோகிக்கப்பட்டன. அத்துடன் சு.கவின் பொதுச்செயலாளராகக் கடமையாற்றிய துமிந்த திஸநாயக்க தொடர்பிலும் கடும் விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன. இந்தப் பின்னணியிலேயே நேற்றைய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகப் புதிய நிர்வாக குழு இதன் போது தெரிவு செய்யப்பட்டது.

சுதந்திரக் கட்சியின் முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்கள் கட்சியின் ஆலோசகர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். அந்த வகையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரட்ன ஆகியோர் கட்சியின் ஆலோசனைக் குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சியின் தலைவராக மீண்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்டார். கட்சியின் பொதுச் செயலாளராக பேரோசியர் ரோஹன லக்ஸ்மன் பியதாச தெரிவு செய்யப்பட்டார்.

கட்சியின் தேசிய அமைப்பாளராக அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவும், பொருளாளராக நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.திஸாநாயக்கவும் தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, அமைச்சர் டபிள்யு.டி.ஜே.செனவிரத்ன, அநுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜயந்த ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சியின் உப தலைவர்களாக ஏ.எச்.எம்.பௌசி, சரத் அமுனுகம, மஹிந்த அமரவீர, தயாசிறி ஜயசேகர, ரெஜினோல்ட் குரே, பியசேன கமகே, விஜித் விஜயமுனித சொய்ஸா, மஹிந்த சமரசிங்க, டிலான் பெரேரா, தென் மாகாண முதலமைச்சர் சான் விஜயலால் டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிய உப செயலாளர்களாக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏகநாயக்க, வடமேல் மாகாண முதலமைச்சர் தர்மசிறி தஸநாயக்க, மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய, ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, பிரதியமைச்சர் லசந்த அழகியவன்ன, முன்னாள் பிரதியமைச்சர் சுதர்சினி பெர்ணான்டோபுள்ளே, சுமேதா ஜீ. ஜயசேன ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

சுதந்திரக் கட்சியின் தற்போதுள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மத்திய செயற்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

மத்திய குழுவுக்குத் தெரிவு செய்யப்படும் ஏனைய நியமனங்கள் கட்சியின் தலைவரினால் மேற்கொள்ளப்படவுள்ளன.

நேற்றைய அதிரடி மாற்றங்களை அடுத்துக் கட்சி இனிப் புதிய பாதையில் பயணிக்கவுள்ளதாக சு.கவின் உறுப்பினர்கள் அனைவரும் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தனர். (ஐ)

## இந்திய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்பரப்பில் நேற்று அதிகாலை கடற்படையினர் ரோந்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறித் தொழிலில் ஈடுபட்ட இந்திய மீனவர் படகு ஒன்று கடற் படையினரால் தடுக்கப்பட்டுச் சோதனையிடப்பட்டது.

படகிலிருந்த இந்திய மீனவர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டனர். படகும் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

மலேரியாச் சோதனையின் பின்னர் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் மீனவர்கள் 6 பேரும் ஒப்படைக்கப்படுவர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். (ஐ)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவனின் வலது கை துண்டாகிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச்சம்பவம் இரத்தினபுரி – பதுளை வீதியில், பெல்மதுளை, சன்னஸ்கம கிரிவெல் தெனிய சந்தியில் நேற்றுப் பிற்பகல் நடந்துள்ளது.

சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மாணவனின் கையே இவ்வாறு துண்டாகியுள்ளது.

மாணவன் தனது கையை பஸ் ஜன்னலுக்கு வெளியில் வைத்தவாறு வந்துள்ளார்.

இதன்போது பாரவூர்தி ஒன்று கைப் பகுதியை மோதியதால் மாணவனின் கை துண்டாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் மாணவன் கையுடன் இரத்தினபுரி வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளன. (ஐ)

## 1500 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை இவ்வளவு பெறுமதியான சொத்துக்களைத் தாம் கண்டுபிடித்துள்ளனர் எனப் பயங்கரவாத ஒழிப்புப் பிரிவின் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் இந்தச் சொத்துக்களுக்குப் புறம்பாகப் பொருள்களும், சொத்துக்களும் இன்னும் இருக்கின்றன எனத் தகவல்கள் கிடைக்கப் பெற்றிருப்பினும், அவற்றை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள முடியாதுள்ளதாவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இவ்வாறு அரசுடமையாக்கப்பட்ட சொத்துக்களில், கட்டுநாயக்கவிமான நிலையத்துக்கு அருகில் காணப்பட்ட காணி, வெள்ளவத்தையிலுள்ள சுகபோகவீட்டுத்தொகுதி, கொழும்பு ஜம்பட்டா வீதியிலுள்ள நவீன அச்சகம், கறுவாத்தோட்டத்திலுள்ள காணி, பல படகுகள் மற்றும் பல வங்கிக் கணக்குகளும் அடங்குகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பயிற்சியாளராக ஹசான் திலகரத்ன

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஹசான் திலகரத்ன, இலங்கை 19 வயதுக்குட்டபட்ட அணிக்கு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நியூசிலாந்தில் நடைபெற்ற 19 வயதுக்குட்டபட்ட உலகக் கிண்ணத் தொடரில், இலங்கை அணியின் ஆட்டம் மோசமாக இருந்தது. அதன் காரணமாக, அணியின் பயிற்சியாளராக செயல்பட்ட ரோய் டயஸ் உடனான ஒப்பந்தத்தை இலங்கை கிரிக்கெட் சபை நீடிக்க விரும்பவில்லை.

இந்நிலையில் இலங்கையின் முன்னாள் வீரரும், துடுப்பாட்ட பயிற்சியாளராக செயல்பட்டவருமான ஹசான் திலக



ரத்ன, 19 வயதுக்குட்டபட்ட அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திலங்க சுமதிபால தலைமையிலான நிர்வாகம், ஹசான் திலகரத்னவை இரண்டு ஆண்டுகளுக்கு 19 வயதுக்குட்டபட்ட அணியின் பயிற்சியாளராக ஒப்பந்தம் செய்துள்ளது. அவருக்கு மாத ஊதியமாக 15 லட்சம் ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஹசன் திலகரத்ன இலங்கை டெஸ்ட் அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளராகக் கடந்த 2017 ஆம் ஆண்டு செயல்பட்டார். அப்போது இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இலங்கை அணி இழந்தது.

ஆனால், எந்த வெற்றியும் இல்லாமல் திலகரத்ன தனது பயிற்சியாளர் பதவியை நிலைநிறுத்திக் கொள்ளவே முற்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது. மேலும், 20/20 தொடரிலும் அவரின் பயிற்சி எந்த மாற்றத்தையும் கொண்டு வராததால், இலங்கை அணி அந்த தொடரையும் இழந்தது.

அதன் பின்னர், திலான் சமரவீரவை இலங்கை கிரிக்கெட் சபை ஹசான் திலகரத்னவுக்கு பதிலாக பயிற்சியாளராக நியமித்தது. இதனால், தற்போது இலங்கை 19 வயதுக்குட்டபட்ட அணிக்கு ஹசான் திலகரத்ன பயிற்சியாளராக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது குறித்து சந்தேகம் எழுந்துள்ளது.



# உலகக் கிண்ண போட்டியில் ரசிகர்களை கவரும் ஒளி நிகழ்ச்சி

2018 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ரஷ்யாவில் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் ரசிகர்களை மகிழ்விக்கும் விதமாக ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் வண்ண விளக்குகளைக் கொண்ட லேசர் லைட் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் உலகக் கிண்ண உதைபந்தாட்டம் மற்றும் உதைபந்து தொடர்பான படங்கள் சென்ட்ரல் சதுக்கத்தில் உள்ள சுவரில் ஒளி பரப்பப்பட்டன. இந்த லேசர் லைட் நிகழ்ச்சியை ஏராளமான ரசிகர்கள் ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர்.

உதைபந்துக்கும் அதன் ரசிகர்களுக்கும் இருக்கும் உணர்வுகளை சித்திரிக்கும் நோக்கில் இந்த லைட் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருவததாவும், இந்நிலையில் இந்த நிகழ்ச்சியை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை தினமும் இரவில் நடத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அப்ரிடி அறிவிப்பால் அதிர்ச்சியில் ரசிகர்கள்

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து முழுமையாக விலகுவதாக அறிவித்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ஷகிட் அப்ரிடி, இனிமேல் எக்காரணம் கொண்டும் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட மாட்டேன் எனத் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஷகிட் அப்ரிடி சமீபத்தில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் – உலக லெவன் அணிகளுக்கு இடையிலான போட்டியில் விளையாடினார். இந்த போட்டியில் அப்ரிடி உலக லெவன் அணியின் தலைவராக செயற்பட்டார். இதில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த நிலையில், இந்தப் போட்டியே தனது கடைசி சர்வதேசப் போட்டி என அறிவித்துள்ள ஷகிட் அப்ரிடி, இனிமேல் அனைத்து வகை சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து முழுமையாக விலகுவதாக அறிவித்தார்.

இதற்கு முன் பாகிஸ்தான் அணியில் இருந்து ஓய்வு பெறுவதாக ஐந்து முறை அப்ரிடி அறிவித்துள்ளார். இருப்பினும் மீண்டும் தனது முடிவை மாற்றி விளையாட வந்துள்ளார். எனினும், இம்முறை, சர்வதேச போட்டிகளில் இனிமேல் விளையாடப்போவதில்லை என்று அவர் தற்போது உருக்கமாகத் தெரிவித்துள்ளமை கிரிக்கெட் ரசிகர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச போட்டிகளில் நான் பங்கேற்கும் கடைசி போட்டி மேற்கிந்தியத் தீவுகள் – உலக லெவன் அணிகளுக்கு இடையிலான போட்டியாகத்தான் இருக்கும்.

அதிகமான வயது, காயத்தால் இனி என்னால் கிரிக்கெட் போட்டிகளில் கவனம் செலுத்த முடியாது. எனவே, இனிமேல் நான் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து முழுமையாக ஓய்வுபெறவுள்ளேன்.

கிரிக்கெட்டின் தாயகம் என அழைக்கப்படும் லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் கடைசிப் போட்டியை விளையாடியமை எனக்குப் பெருமையாக இருக்கிறது. இந்த நிகழ்வை என்னால் மறக்க முடியாது எனத் தெரிவித்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் – உலக லெவன் அணிகளுக்கு இடையிலான போட்டியின் போது, அப்ரிடிக்கு அனைத்து வீரர்களும் பிரியாவிடை கொடுத்து, மரியாதையும் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# 2019 இல் ஐ.பி.எல். தொடர் நடக்காதா?

கடந்த 11 வருடங்களாக தொடர்ந்து நடந்து வந்த ஐ.பி.எல். தொடர் 2019 இல் நடக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் 2019 இல் இங்கிலாந்து நாட்டில் நடக்க உள்ளது. இந்தப் போட்டிகள் மே மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

ஆனால் உலகின் பெரும்பாலான விளையாட்டு வீரர்கள் அதே மாதத்தில் ஐ.பி.எல். தொடரில் ஆடிக்கொண்டிருப்பர். அதேநேரத்தில் உலகக் கிண்ண தொடர் தொடங்கும் முன் வீரர்கள் குறைந்தது 15 நாள்களாவது ஓய்வு எடுக்க வேண்டும் என்பது விதி. இதனால் அடுத்த ஆண்டு ஐ.பி.எல். ஆட்டத்தில் சர்வதேச வீரர்கள் கலந்து கொள்வதில் சிக்கல் எழுந்துள்ளது.

இது ஒருபுறம் இருக்க 2019 ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்ற பொதுத்தேர்தலும் அதன் பிரசாரங்களும் தொடங்கவிருக்கின்றன.

மேலும் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன. தேர்தல் காரணமாக 2019ஆம் ஆண்டு ஐ.பி.எல் வேறு நாட்டிற்கு மாற்றப்படலாம் எனவும் எதிர்பார்க்கபடுகிறது

ஆனால் கடந்த 2009 இல் தென்னாரிக்காவில் நடந்த தொடரில் முறைகேடாகப் பணப்பரிமாற்றம் நடைபெற்றதாக தற்போது தெரியவந்துள்ளது.

மேலும் அந்நியச் செலாவணி முறைகேட்டில் ஐ.பி.எல். நிர்வாகத்திற்கும் இந்தியக் கிரிக்கெட்டுக்கும் அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த காரணத்தினால் ஐ.பி.எல். தொடர் வெளிநாட்டில் நடந்தால் மேலும் சில பிரச்சினைகள் வரலாம் என அரசு தீவிரமாக கண்காணிக்கலாம். இது போன்ற பல்வேறு காரணத்தினால் அடுத்த வருட ஐ.பி.எல். தொடர் நடப்பதில் பல சிக்கல்கள் உள்ளன.

இது போன்ற பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் ஐ.பி.எல். தொடர் நடத்த வாய்ப்புகள் குறைவு. இதனால் தொடரானது ரத்து செய்யவோ, அல்லது மாற்றியமைக்கப்படவோ அதிக வாய்ப்புகள் உள்ளன என ஐ.பி.எல். நிர்வாகிகள் வட்டாரத்தில் பரபரப் பாக பேசப்படுகிறது.

(ஐ)




# மீண்டும் அணிக்கு திரும்பினார் தனஞ்சய

தந்தையின் மறைவிற்கு பின்னர் மீண்டும் இலங்கை அணிக்காக விளையாட களமிறங்கியுள்ளார் தனஞ்சய டி சில்வா.

தனது தந்தையின் மறைவு காரணமாக மேற்கிந்திய தீவுகளுடனான டெஸ்ட் தொடரில் இருந்து விலகிய இலங்கை அணியின் வீரர் தனஞ்சய டி சில்வா மீண்டும் இலங்கை அணியில் இணையவுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கை கிரிக்கெட் சபை இத்தகவலை வெளியிட்டுள்ளது.



மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாதுரை விநாயகமூர்த்தியின் முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை தென்மராட்சி கலாமன்ற கலாசார மண்டபத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சட்டத்தரணி கேசவன் சயந்தன் தலைமையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

# வடக்கு கடற்பரப்பில் நேற்று கடற்படையால் 7 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜுன் 04

சட்டவிரோதமாக இலங்கைக்குள் பிரவேசித்த 7 பேரை வடக்கு கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

காங்கேசன்துறையிலிருந்து 11 கடல் மைல் தொலைவில் வைத்து நேற்றுக் காலை இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனக் கடற்படை தெரிவித்தது.

இரண்டு படகோட்டிகளுடன் இரண்டு பெண்கள், இரண்டு ஆண்கள், சிறுவன் என 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக டிங்கி படகின் ஊடாகக் கடல் மார்க்கமாக இலங்கைக்கு வந்துள்ளனர்.

அவர்கள் பயணித்த டிங்கி படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கைப்பற்றப்பட்ட டிங்கிப் படகுடன் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர். (ஐ)





# ரணிலின் 100 நாள் திட்டம் அமெரிக்காவின் பிரதியே

## கூறுகிறார் ஸ்ரீ சுமங்கள தேரர்

பிரதமர் ரணிலின் நூறு நாள் வேலைத்திட்டம் என்பது அமெரிக்காவிலிருந்து பிரதி செய்யப்பட்ட ஒன்று என்று சியம் மகா பீடத்தின் ரங்கிரி தம்புளு விகாரையின் மகாநாயக்கர் கலாநிதி இனாமலுவே ஸ்ரீ சுமங்கள தேரர் தெரிவித்துள்ளார்.

மாதுளுவாவே சோபித தேரரின் நினைவு தின வைபவத்தில் பேசிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான் ஆட்சியேற்ற போது நடைமுறைப்படுத்தப்பட்ட நூறு நாள் வேலைத்திட்டமானது மடத்தனமானது என்றும், அதனை யார் தயார் செய்தார் என்று தனக்குத் தெரியாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் திட்டத்தை நேரடியாக விமர்சித்தார் என்று விமர்சனங்கள் எழுந்ததுடன், கொழும்பு அரசியலில் பரபரப்பையும் ஏற்படுத்தியது.

ஐக்கிய தேசியக் கட்சியினர் இது தொடர்பாக உடனடியாக கலந்தாலோசனையும் நடத்தியிருந்தனர். இந்நிலையில், ஜனாதிபதியின் அன்றைய உரை தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள சியம் மகா பீடத்தின் ரங்கிரி தம்புளு விகாரையின் மகா நாயக்கர் கலாநிதி இனாமலுவே ஸ்ரீ சுமங்களதேரர், இந்த வேலைத்திட்டத்திற்குப் பிரதமர்தான் பொறுப்பு என்று குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தில் உருவான 100 நாள் வேலைத்திட்டம் கடந்த 85 வருடங்கள் பழைமை வாய்ந்தது. இது அமெரிக்காவிலிருந்து பிரதி செய்யப்பட்ட ஒன்று.

இதே வேலைத்திட்டத்தை ஐ.தே.க. கடந்த 90 களிலும் அறிமுகம் செய்திருந்தது. இதனால், இந்த வேலைத்திட்டம் பிரதமருடையது என்பது உறுதியாகின்றது. நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தத் திட்டமானது அமெரிக்காவின் பிரதியன்றி, இலங்கையினது அல்ல. – என்றார். (ஐ)

# அங்கஜனுக்கு ஐ.தே.கவும் ஆதரவு

பிரதிச் சபாநாயகர் பதவிக்கு அங்கஜன் இராமநாதனின் பெயர் பிரேரிக்கப்பட்டு உள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியும் தனது ஆதரவை அவருக்கு வழங்கும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதிச் சபாநாயகராக இருந்த திலங்க சுமதிபால பதவிலகியிருந்த நிலையில் வெற்றிடமாக உள்ள அந்தப் பதவிக்கு, அங்கஜன் இராமநாதன் பிரேரிக்கப்பட்டார்.

கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினரும் பிவிதுரு ஹெலஉறுமயவின் தலைவருமான உதய கம்மன்பிலவும் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் கூட்டு எதிரணி சிந்திப்பதாகவும் அங்கஜன் இராமநாதனை நியமிப்பதில் தமக்கு ஆட்சேபனை இல்லை எனவும் தெரிவித்திருந்தார்.

எனினும் பிரதிச் சபாநாயகர் பதவிக்கு அங்கஜன் இராமநாதன் நிறுத்தப்படுவதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸும் ஆதரிக்கவில்லை எனத் தகவல் வெளியாகிய போதும் அங்கஜன் இராமநாதனை நியமிக்கும் முடிவில் ஜனாதிபதி மாற்றத்தை ஏற்படுத்தவில்லை எனத் தெரியவருகிறது.

இந்த நிலையில் ஐக்கியதேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் இடையிலான கூட்டாட்சி இணக்கப்பாட்டில் பிரதிச் சபாநாயகர் பதவி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு என உடன்பாடு காணப்பட்டுள்ளதால் அங்கஜன் இராமநாதனின் தெரிவை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அர்ஜுன அலோசியஸிடம் நான் பணம் வாங்கவில்லை

## கூறுகிறார் அகில விராஜ்

கொழும்பு, ஜுன் 04

"அர்ஜுன அலோசியஸிடம் இருந்து நான் பணம் வாங்கவில்லை. அந்த பட்டியலில் நான் இல்லை. அதற்கான தேவையும் எனக்கில்லை." – என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

118 பேர் அர்ஜுன அலோசியஸுடன் தொடர்புக் கொண்டு பணம் பெற்றனர் எனக் கூறப்படுகின்றது. அலோசியஸுடன் சாதாரண உறவை மீறி நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராவது குற்றம் இழைத்திருந்தால் அவர்களுக்கு எதிராக நல்லாட்சி அரசு தராதரம் பராமல் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மத்திய வங்கி மோசடியுடன் சம்பந்தப்பட்ட அர்ஜுன அலோசியஸுனுடன் தொடர்பு வைத்துக் கொண்டு 118 பேர் பணம் பெற்றனர் எனக் கூறப்படுகின்றது

இந்தப் பட்டியலில் நான் இல்லை. அர்ஜுன அலோசியஸிடம் நான் பணம் வாங்கவில்லை. அதற்கான தேவை எனக்கு ஒருபோதும் இல்லை. இந்த விவகாரத்தை பொறுத்தவரை பட்டியலை வெளியிடும் வரை எம்மால் எதுவும் கூற முடியாது. என்றாலும் அரசியல்வாதி என்ற வகையில் வர்த்தகர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளாமல் அரசியல் செய்ய முடியாது. ஆனால் அந்த தொடர்பைக் கொண்டு தவறுகள் செய்ய முடியாது. ஊழல் மோசடிகளில் ஈடுப்பட முடியாது.

எனவே வர்த்தக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் வர்த்தகர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துக்கொள்ளவதில் எந்தத் தவறுகள் இல்லை.

எனவே அர்ஜுன அலோசியஸுடனான தொடர்பைக் கொண்டு யாராவது குற்றம் இழைத்திருந்தால் அவர்களுக்கு எதிராக நல்லாட்சி அரசு தராதரம் பராமல் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கும். – என்றார். (ஐ)

# இந்த வருட இறுதிக்குள் மாகாண சபைத் தேர்தல்

## ஜனாதிபதி கூறினார் என எஸ்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 04

காலாவதியாகியுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை இவ்வருட இறுதிக்குள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார் என்று முன்னாள் அமைச்சரும் தற்போதைய சுதந்திரக் கட்சியின் பொருளாளருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இதனை ஜனாதிபதி அறிவித்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் நடத்தப்படும் முறைமை தொடர்பில் இதுவரை எந்தத் தீர்மானமும் இல்லையெனவும் அவர் கூறினார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.06.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.